SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 ஜூன் 2026
₹25
Volume : 46 Issue : 24
www.samarasam.net

## வாக்குக்குப் பணமும் அரசின் இலவசங்களும்..!

## இஸ்லாமிய இலக்கிய உலகின் முத்திரை நாயகன் ஜே.எம்.சாலி






# முன்மாதிரி மஸ்ஜித் முஹல்லா

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

தாம் விரும்புவதையே தம் சகோதரனுக்கும் விரும்பாத வரை ஒருவர் (முழுமையான) இறைநம்பிக்கை கொண்டவர் ஆகமாட்டார்.

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611




# உள்ளே...


6 **தலையங்கம்**
புதிய அரசின் பொறுப்புகளும் கடமைகளும்

8 **மௌலவி மு.ஷேக் அப்துல் காதிர் காஷிஃபி, காஸிமி**
முன்மாதிரி மஸ்ஜித்
முன்மாதிரி மஹல்லா

14 **சேயன் இப்ராகிம்**
வாக்குக்குப் பணமும்
அரசின் இலவசங்களும்..!

18 **சேயன்**
இஸ்லாமிய இலக்கிய உலகின்
முத்திரை நாயகன் ஜே.எம்.சாலி

20 **ரிஃபாயுதீன்**
காதல்
- ஓர் இஸ்லாமியப் பார்வை

24 **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**
தன் கையே தனக்கு உதவி

30 **அபூஹம்னா BE**
தீமையைத் தடுக்கும் வழிமுறை

36 **அ.நஜ்முத்தீன்**
சதுரங்க விளையாட்டு!

38 **ஐ.மஹபூப் ஜான்**
குர்ஆன் கூறும்
அறிவியல் சிந்தனைகள்

42 **A.H. யாசிர் அரபாத் ஹஸனி**
தொழுகைக்கு மட்டும்தான்
பள்ளிவாசலா?

44 **ஜரீனா ஜமால்**
நாவல் : அக்கரைப் பச்சை

47 **டாக்டர் அம்ரின் கலீல்**
கவிதை :
சாத்தியமற்றவைகளின் சாத்தியம்

50 **முஹம்மது ஆரிப்**
உதயமானது தமிழ்நாடு பேரிடர்
மீட்புக் குழு(TNRW)

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● சிறார் உலகம்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*
பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## நம்பிக்கை தந்த உரை

சமரசம் 1-15 மே இதழில் 'இன்னும் சொல்லப்படாத கதைகள்' மேடை பகுதியில் சமரசம் இதழ் பொறுப்பாசிரியர் வி.எஸ்.முஹம்மத் அமீன் புத்தகக் காட்சியில் பேசியதைப் படித்துப் பரவசப்பட்டேன். பல வரலாறுகளைக் கதைகளாகவே சொல்லியிருக்கிறார். இன்றைய செய்திகளைப் பதிவு செய்தால் நாளைய வரலாறாகவே அது அமைந்து விடும் என்பதற்கு எடுத்துக்காட்டான பல வரலாற்றுச் செய்திகளைப் பல்வேறு சமய மக்கள் கூடுகின்ற புத்தகக் காட்சியில் பேசிய விதம் அருமை.

இஸ்லாமிய வரலாற்றில் குகைத் தோழர்கள், யூசுஃப் நபியின் வாழ்கையில் நடந்த நிகழ்வுகள், புத்தக வாசிப்பால் கிடைக்கின்ற அனுகூலங்கள், ஏற்கனவே பேசியவர்களின் பேச்சுகளில் இருந்து நல்ல விஷயங்களை நயம்பட உரைத்து இறுதியில் ஃபலஸ்தீன குழந்தைகளின் உள்ளங்களில் ஏற்பட்ட உன்னதமான எண்ணங்களைச் சொல்லியிருந்ததைப் படித்தபோது வாசிப்பினால் ஏற்படுகின்ற நம்பிக்கை வாழ்கைக்கு நல்ல பலனைத் தரும் என்பதை அறிய முடிகின்றது.

– வலங்கைமான் நஸீர்

## வாசிப்புதான் அடித்தளம்

இன்னும் சொல்லப்படாத கதைகள் அட்டைப்படம் ஒரு கதைக் களத்திற்கான கருப்பொருளை உருவாக்கிய தோற்றத்தை தந்தது. மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட்டது ஒரு வளர்ச்சிப் பாதையாக இருக்கட்டும். வாசிப்பை நேசிப்போம்! ஆம் வாசிப்பிருந்தால்தான் நேசிக்க முடியும். உணவு உடை உறைவிடம் போன்று இதுவும் ஓர் அடிப்படைத் தேவை என்பதை உணரும் போது தான் அறிவு விருத்தியடைய ஆரம்பிக்கும். வழிகாட்டுதல்களும் புறக்கணிப்பும் கவிதை இன்றைய உலகைப் படம் பிடித்துக் காட்டுவது போல் இருந்தது. உலகப் பொதுமறை உன்னதமான செய்தி.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## ஊடகங்கள் உண்மையை ஏன் வெளியிடவில்லை?

வெறுப்புக்குப் பலியாகாதீர் தலையங்கம் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியது. நாசிக்கில் உள்ள TCSஇல் பணிபுரிபவர்களில் சிலருக்குப் பாலியல் துன்புறுத்தல், கட்டாய மதமாற்றம், மத வழிபாடு போன்ற செய்திகள் ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனக் கூறிய சிறப்புப் புலனாய்வுக்

## கண் கலங்க வைத்த கடைசிப் பக்கம்



மே 1-15 சமரசம் இதழ் முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம் வரை ஒரே மூச்சில் படிக்க வைத்து விட்டீர்கள். கடைசிப் பக்கம் கண் கலங்க வைத்ததுடன் அமைதி வழியில் ஓர் அராஜகத்தை, அநீதியை உலகின் கவனத்திற்குக் கொண்டு செல்வது எப்படி என்ற வழிகாட்டுதலை வழங்குகிறது. மினாப் பள்ளிச் சிறுமிகளே உங்களை நாங்கள் பார்த்ததில்லை. ஆனால் உங்கள் தியாகம் உலக வல்லரசை ஓட ஓட விரட்டி உள்ளது.

'நீதிக்கான பழிவாங்கல்' கட்டுரை அருமை. ரேச்சல் கொர்ரியை நன்றாக நினைவு உள்ளது. 2003 ஏப்ரல் சமரசம் இதழ் என்று நினைக்கிறேன். அதில் படித்துத் தெரிந்து கொண்டேன். அந்த வீர மங்கையை 23 ஆண்டுகள் கழித்து நினைவூட்டிய ஈரானிய மக்களையும் அதனை ஆவணப்படுத்திய சமரசம் குழுவிற்கும் ஒரு சல்யூட்.

– முஹம்மது ஆரிப், ஓசூர்

குழுவின் அறிக்கை ஊடகங்களில் வெளி வரவில்லை. தவறான, உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டதற்காக எந்த ஓர் ஊடகமும் வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.

– N. பாபு அருள் ஜோஷி, களக்காடு

## சப்பைக்கட்டு கட்டுரை

ஏ.ஏ.ஹெச்.கே. கோரி கதை அருமை. சிறந்த சொல்லாடல்கள். மனிதாபிமானமிக்கவரால் எழுதப்பட்ட மனிதாபிமான கதை இது. பெருமை சேர்த்தீர், பெருமையுற்றீர். ஔரங்கஜேப் குறித்த கட்டுரை சப்பைக்கட்டு. இன்னும் சொல்லப்படாத கதை நல்ல கட்டுரை. பாராட்டுகள்.

– R.T.K. சுப்ரமணியன் ஐயர்,
கீழ்ப்பெரும்பாக்கம்

## சொல்லில் அடங்காத மகத்துவம்

ஆசை எல்லையில்லாப் பேராசையாக மாறி மண்விழும். நபிமொழி விளக்கம் இருள் நீக்கும் ஒளி. என்றென்றும் நிலநடுக்கம் அதிர்ச்சி ஏற்படுத்தியது. இயற்கையோடு இசைவோடிருக்க திருக்குர்ஆன் சிகரத்தில் நின்று பேசுகிறது. வெறுப்புப் பட்டியலைக் குறைப்போம் சிறப்பான கட்டுரை. அறிவைக் கூர்தீட்ட வாசிப்பு உதவும். வாசிப்பின் மகத்துவம் சொல்லில் அடங்காதது. ரேச்சல் கொர்ரி மனிதாபிமானத்திற்கான அழியாத குரல்.

– ப.குருசாமி, தேனி

## மானுட வாழ்க்கைப் பாடங்கள்

வி.எஸ்.முஹம்மத் அமீன் ஆற்றிய இன்னும் சொல்லப்படாத கதைகள் உரை அருமை. கதைக்குள் மானுட வாழ்க்கைப் பாடங்கள் பொதிந்துள்ளன. திருமறையின் குகைவாசிகள் புலம்பெயரும் மக்களின் வாழ்க்கைப் பாடம். அபூ இப்ராஹீம் அள்ளிச் சென்ற புத்தகங்கள், அவரைச் சந்திக்க வருபவர்களுக்கு அளிக்கப்பட்டு வாசிப்பைச் சேர்த்த விதம் வியப்படைய வைத்தது. கதையல்ல வாழ்க்கைப் பாடங்கள்.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

## வியப்பளிக்கும் வாசிப்பு ஆர்வம்

நாசிக் டாடா நிறுவனத்தில் நடைபெற்றதாக பொய்யான செய்திகளைக் குறித்த தலையங்கம் சிறப்பு. தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்படும் என்று தெரிந்தே தான் கொண்டு வரப்பட்டது. இன்னும் சொல்லப்படாத கதைகளில் சொல்லப்பட்ட அபூ இப்ராஹீமின் வாசிப்பு ஆர்வம் வியப்பளிக் கிறது. ரஜப் ஹிந்த் குறித்த செய்தி மனதை உலுக்கிவிட்டது. ரேச்சல் கொர்ரியின் தியாகம் நினைவு கூரப்படத்தக்கது.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## மன்னிக்க மாட்டீர்களா?

பெண்கள் கண்ணாடிக் குடுவையைப் போன்றவர்கள் என்ற நபிமொழி மிக உன்னதமான செய்தியை உணர்த்துகிறது. இறைவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். ஆனால் நாம் யாரையும் மன்னிக்கத் தயாரில்லை. அப்பாஸ் அல் ஆசாதியின் கட்டுரை நன்று. தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட வேண்டிய மசோதா.

– S. அஜித்தா, M. லைலாம்மா,
S. மகுதனன், தேனி

## சிந்திக்க வேண்டிய செய்தி

தமிழ்நாட்டில் இஸ்லாமிய அமைப்புகள் அரசியல் அதிகாரம் பெற ஒன்றிணைய வேண்டியது அவசியம். பிறமத பண்டிகைக்கும் இஸ்லாமியப் பண்டிகைக்கும் வேறுபாடு மது விற்பனை இல்லை. மாறாக ஜகாத் எனும் ஏழை வரி கொடுக்கப்படுகிறது என்பது சிந்திக்க வேண்டிய செய்தி. போதுமென்ற மனமே சிறந்த அருட்கொடை என்ற வாழ்க்கைப் பாடம் அருமை.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

சரம் : 46
மலர் : 24

وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 துல்ஹஜ் 14 - 28 ● 2026 ஜூன் 1-15

# புதிய அரசின் பொறுப்புகளும் கடமைகளும்

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு நலத்திட்டங்களைச் செய்ததுடன், புதிய பல வாக்குறுதிகளுடனும், வலிமையான கூட்டணியுடனும் களம் இறங்கிய திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 73 இடங்களில் வென்று எதிர்க்கட்சியாக அமர்ந்துள்ளது. எல்லாவிதமான எதிர்பார்ப்புகளையும், கருத்துக் கணிப்புகளையும் தாண்டி தவெக வெற்றி பெற்று வரலாறு படைத்து உள்ளது.

தவெகவின் இந்த வெற்றியின் மூலம் திமுக, அதிமுக ஆகிய இரு திராவிடக் கட்சிகளின் நீண்டகால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு கூட்டரசுக்கான புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. தவெகவிற்கு எதிராக, திமுக கூட்டணியில் இருந்து வென்ற காங்கிரஸ், விசிக, முஸ்லிம் லீக் ஆட்சியில் பங்கு பெற்றுள்ளன. எதிர்வரும் காலங்களில் தமிழ்நாட்டில் சிறிய கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்குபெற முடியும் என்ற வரலாற்றுத் திருப்புமுனையை விஜய் ஏற்படுத்தியுள்ளார்.

விஜய் தலைமையிலான புதிய அரசில் படித்தவர்கள், இளைஞர்கள், பெண்கள் இடம்பெற்றிருப்பதன் மூலம் தமிழ்நாட்டு அரசியலுக்குப் புது இரத்தம் பாய்ச்சியுள்ளது தவெக. தலித்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பெண்கள் அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பதும் வரவேற்கத் தக்க முன்னெடுப்பு.

ஆட்சியில் அமர்ந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தலைவர்களை இல்லம் தேடிச் சென்று வாழ்த்துகளைப் பெற்ற முதலமைச்சர் விஜய் இந்த அரசியல் நாகரிகத்தைத் தொடர வேண்டும். பொதுமக்களுக்கு இடையூறாகக் கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் செயல்பட்டு வந்த 717 TASMAC மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை இரண்டு வாரங்களுக்குள் மூடுமாறு தமிழ்நாட்டு முதலமைச்சர் விஜய் பிறப்பித்த உத்தரவு பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியது.

2016ஆம் ஆண்டு முதல்வராகப் பொறுப்பேற்ற பின் ஜெயலலிதா 500 TASMAC கடைகளை மூட உத்தரவிட்டார். அவரது இறப்பிற்குப் பின் 2017ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் 500 TASMAC கடைகள் மூடப்பட்டன.

*2021ஆம் ஆண்டு திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற உடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 500* TASMAC *கடைகளை மூட உத்தரவிட்டார். ஆனால் படிப்படியாக* TASMAC *கடைகளை மூடி பூரண மதுவிலக்கைக் கடந்த அரசுகளால் கொண்டுவர இயலவில்லை.*

*போதை இல்லாத ஆட்சியைத் தருவதாக உறுதியளித்துள்ள முதலமைச்சர் விஜய் தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டை மது, போதை இல்லா மாநிலமாகத் திகழச் செய்ய வேண்டும். இலஞ்சம், ஊழலற்ற ஆட்சி என்ற முதலமைச்சரின் முழக்கம் புரட்சிகரமானது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு தமிழ்நாடு அரசு முழுக் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரிகளும், மக்களும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.*

*முதலமைச்சரின் அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்காக தமிழ்நாடு அரசின் சிறப்புப்பணி அலுவலராக ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டது தவறான முன்னுதாரணம். அதே வேளையில் இந்த நியமனத் திற்கு எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அந்த நியமனம் ரத்து செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது. இதுபோன்ற தோழமைச் சுட்டல்களை அரசு கவனத்தில் கொண்டு தம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.*

*கடந்த ஆட்சிக்காலங்களில் கொண்டுவரப்பட்ட நலத்திட்டங்களைத் தொடர் வது வரவேற்புக்குரியது. அந்த நலத்திட்டங்களில் தேவையான மாற்றங்களையும் கொண்டுவர வேண்டும். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவேன் என்று விஜய் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த விசயத்தில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.*

*தமிழ்நாட்டைக் குறிவைத்துக் காத்திருக்கும் ஃபாசிசஸத்தை வளரவிடாமல் கொள்கை எதிரியான பாஜகவை ஒழித்துக் கட்டுவதிலும் முதலைமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வெறுப்பின் பிடியிலிருந்து மீட்டெடுத்து அன்பின் நிலமாக தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக மாற்றிக் காட்ட வேண்டும்.*

*மும்மொழிக் கொள்கைத் திணிப்பு,* PM SHRI *திட்ட முன்னெடுப்புக்கு தமிழ் நாடு அரசு ஒருபோதும் இடம் தரக் கூடாது. தமிழ்நாடு முதலமைச்சர் பதவி ஏற்பின் போதும், அமைச்சரவை பதவி ஏற்பின் போதும் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு வந்தே மாதரம் முதலில் பாடப்பட்டதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளவோ, நியாயப் படுத்தவோ முடியாது. இதன்மூலம் ஒன்றிய ஆட்சியின் அழுத்தங்களுக்குத் தமிழ்நாடு அரசு அடிபணிந்து விடுமோ என்ற அச்சமும், ஐயமும் ஏற்பட்டு உள்ளது.*

*இந்த அச்சத்தையும், ஐயங்களையும் போக்கும் வகையில் இனிவரும் காலங் களில் மாநில சுயாட்சியைப் பறிக்கும் ஒன்றிய அரசுக்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டை முதல்வர் எடுக்க வேண்டும். மதச்சார்பின்மைக்கும், மாநில சுயாட்சிக்கும் எள்முனையளவும் பாதிப்பு வராமல் துணிந்து களமாட முதலமைச்சர் விஜய் முன்வர வேண்டும்.*

*மக்கள் மாற்றத்தை எதிர்நோக்கி வாக்களித்திருக்கின்றார்கள் என்றால் அந்த மாற்றங்களை ஏமாற்றங்களாக்கி விடாத வகையில் சிறந்த மக்களாட்சியைத் தருவதில் புதிய அரசு முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.*

வாசகர்கள் தாங்கள் கேட்ட உரைகளை samarasam.article@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருச்சியில் 28.01.2025 அன்று மாநிலம் தழுவிய அளவில் நடத்திய உலமா மாநாட்டில் **திருநெல்வேலி தாருஸ்ஸலாஹ் உயர் கல்வியக முதல்வர் மௌலவி மு.ஷேக் அப்துல் காதிர் காஷிஃபி, காஸிமி** அவர்கள் ஆற்றிய உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கின்றது.

மேடை 34

# முன்மாதிரி மஸ்ஜித் முன்மாதிரி மஹல்லா

தொகுப்பு: **ஜரீனா யூசுஃப்**

கடந்த நூற்றாண்டின் இறுதியில் உலக வல்லரசாக இருந்த ரஷ்யா அதாவது சோவியத் யூனியன் சிதறுண்ட போது உலக வல்லரசுக் கனவு என்பது சுக்கு நூறானது. அப்போது அமெரிக்காவின் வரலாற்று ஆசிரியர் சாமுவேல் ஹண்டிங்டன், 'இனி உலகத்தின் மேய்ப்பர் முதலாளித்துவம் தான். உலக நாகரிகத்தின் வழிகாட்டி முதலாளித்துவத்தைத் தூக்கிப் பிடிக்கின்ற மேற்கத்திய கலாச்சாரம்தான். 21ஆம் நூற்றாண்டில் ஆயுதப் போரை விட நாடுகளுக்கு இடையே ஏற்படும் போரை விட கலாச்சார மோதல் தான் இருக்கும். குறிப்பாக மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் இஸ்லாமிய கலாச்சாரத்திற்குமான மோதலாகத்தான் இருக்கும்' என்று எழுதினார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, கிறித்தவராக இருந்து இஸ்லாத்தைப் படித்து 1980ஆம் ஆண்டு இஸ்லாத்தின் அரவணைப்பில் வந்த ஜெர்மனைச் சேர்ந்த முராது ஹாஃப்மேன் 'ஆம் இஸ்லாமியக் கலாச்சாரம் மேற்கத்திய கலாச்சாரத்தை மிஞ்சி 2050க்குப் பிறகு முதல் மார்க்கமாக இஸ்லாம் ஆகிவிடும்' என்று எழுதினார்.

தொடக்கத்தில் நபி(ஸல்) அவர்கள் தனி ஒருவராக நின்று இஸ்லாத்தைப் பரப்புரை செய்தார்கள். அவர்கள் மரணிக்கும் பொழுது 10 இலட்சம் சதுர கிலோமீட்டர் தூரம் இஸ்லாம் பரவியது. உமர்(ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் 33 இலட்சம் சதுர கிலோமீட்டர் வரை இஸ்லாம் பரவியது. 1036 பெரும் பெரும் நகரங்கள் இஸ்லாமியர்கள் கையில் இருந்தன.

உலகில் 204 கோடியே 2 லட்சத்து 56 ஆயிரத்து 536 முஸ்லிம்கள் இருக்கிறார்கள். உலக அளவிலே 24% முஸ்லிம்கள் 31% கிறித்தவர்கள். முராத் ஹாப்மேன் கூறுகிறார் '2050க்குப் பிறகு இஸ்லாம்தான் முதல் மார்க்கம்'

இத்தனை அவதூறுகளுக்கு மத்தியிலும் இத்தனை பொய்ப் பரப்புரைகளுக்கு மத்தியிலும் தவிர்க்க முடியாத சக்தியாக இஸ்லாம் வளர்ந்து நிற்பதற்கு என்ன காரணம்? நபி(ஸல்) மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த போது இஸ்லாத்திற்காக ஏற்படுத்திய அடித்தளம் ஒரு மஸ்ஜித் கட்டியதுதான்.

முன்மாதிரி மஸ்ஜிதை உருவாக்கினார்கள். அவர்கள் வீடு கட்டினார்களா? பிளாட்

போட்டார்களா? கடை கட்டினார்களா? குபா என்ற இடத்தில் சில நாள்கள் தங்கினாலும் கூட அங்கும் ஒரு மஸ்ஜிதைக் கட்டினார்கள். மஸ்ஜிதுன் நபவி இன்று பல இலட்சம் மக்கள் தொழக்கூடிய பிரம்மாண்டமான வரலாற்றுச் சிறப்புமிக்க மஸ்ஜிதாக வளர்ந்து நிற்கின்றது. அது ஒரு முன்மாதிரி மஸ்ஜிதாக எப்படித் திகழ்ந்தது என்று நாம் சொல்வதை விட ஸ்காட்லாந்து வரலாற்று ஆசிரியர் தாமஸ் கார்லைல் எழுதியதைப் பார்க்கலாம்.

‘அரபு நாட்டு மக்கள் முஹம்மது நபியைச் சந்திப்பதற்கு முன்னால் எப்படி இருந்தார்கள் தெரியுமா? வீதியிலே சண்டையிட்டுக் கொண்டு விலங்கினம் போன்று அலைந்து கொண்டிருந்தார்கள். நாடு பிடிக்கக் கூடிய ஆட்சியாளர்கள் கூட இவர்களை நம்மால் ஆட்சி செய்ய முடியாது என்று ஒதுக்கித் தள்ளி விட்டிருந்தார்கள். ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்களது பாசறையில் பயின்றதற்குப் பின்னால் உலகாளும் ஆளுமைத் திறன் மிக்கவர்களாக உலகத்தைப் பயிற்றுவிக்கக் கூடிய ஆசிரியர்களாக அவர்கள் மாறினார்கள். எந்த ஒரு நூற்றாண்டும் உலகில் எந்த ஒரு மூலை முடுக்கும் நபித்தோழர்களின் அறிவையும் ஆளுமையையும் ஆற்றலையும் எடுத்துக் கொள்ளாமல் இருந்தது இல்லை’ என்று எழுதுகிறார்.


மௌலவி மு.ஷேக் அப்துல் காதிர் காஷிஃபி, காஸிமி

உமர்(ரலி) அதைத்தான் சொன்னார்கள். ‘ஒட்டகம் மேய்ப்பதற்குக் கூட தகுதியற்றவர்களாக இருந்த நமக்கு இஸ்லாத்தின் மூலமாக அல்லாஹ் கண்ணியத்தைக் கொடுத்தான். எப்பொழுதேனும் இஸ்லாம் அல்லாத வேறு வழியில் நாம் கண்ணியத்தைத் தேடினால் மீண்டும் அல்லாஹ் நம்மை இழிவுபடுத்தி விடுவான்’

நஜ்ஜாஷி மன்னரிடத்தில் ஜஃபர் பின் அபீதாலிப்(ரலி) சொன்னார்கள். ‘நாங்கள் நபி (ஸல்) அவர்கள் வரும்வரை சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தோம். தானாக இறந்த விலங்குகளின் மாமிசத்தைத் தின்று கொண்டிருந்தோம். மானக்கேடானவற்றைச் செய்து வந்தோம். சொந்தங்களைத் துண்டித்து வாழ்ந்து கொண்டிருந்தோம். அண்டை வீட்டுக்காரர்களைத் தள்ளி வைத்திருந்தோம். சுருக்கமாகச் சொன்னால் எங்களில் வலுவானவர்கள் பலவீனமானவர்களைத் தின்று கொண்டிருந்தோம்’. இதைக் கேட்ட நஜ்ஜாஷி மன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அந்த மஸ்ஜிதுன் நபவி எப்படி இருந்தது என்று நீண்ட உரைகள் தேவையில்லை. ஒரே ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். ‘நபி(ஸல்) அவர்கள் நஜ்து தேசத்திற்கு ஒரு குதிரைப்படையை அனுப்பினார்கள். தோழர்கள் ஸுமாமத் பின் உஸால் என்பவரைக் கைதியாகப் பிடித்து வந்தார்கள். அவரை மஸ்ஜிதுன் நபவி உள்ளேயே ஒரு தூணில் கட்டி வைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் நபி(ஸல்) அவர்கள் ‘ஸுமாமா எப்படி இருக்கிறீர்கள்?’ என்று வினவினார்கள். அதற்கு அவர் ‘நன்றாக இருக்கிறேன். என்னை நீங்கள் கொன்று விட்டால் ஒரு போர்க் கைதியைத்தான் கொன்றதாக ஆகும். நீங்கள் என்னைக் கொல்லாமல் உபகாரம் செய்து விட்டு விட்டால் நன்றிக் கடன் பட்டிருப்பேன். ஏதாவது காசு பணம் வேண்டுமானால் நீங்கள் நாடியதைக் கேளுங்கள் தருகின்றேன்’ என்றார். ஏனென்றால் அவர் யமாமா தேசத்தின் தலைவர். ஒரு குறுநில மன்னர்.

நபி(ஸல்) அவர்கள் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்கள். இரண்டாம் நாள் அதே கேள்வி அதே பதில். மூன்றாம் நாள் அதே கேள்வி அதே பதில். நபி(ஸல்) அவர்கள்

‘அவரது கட்டுகளை அவிழ்த்து விட்டு விடுங்கள்’ என்று கூறினார்கள். விடுவிக்கப் பட்ட ஸுமாமா மஸ்ஜிதுன் நபவி அருகில் உள்ள பேரீச்சமரத் தோப்புக்குச் சென்று குளித்து விட்டு வந்தார். வந்தவர் நேராக நபி(ஸல்) அவர்களிடம் சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.

நபி(ஸல்) அவர்கள் பயான் செய்தார்களா? மேடை போட்டுப் பேசினார்களா? இல்லை! மஸ்ஜிதுன் நபவியில் மூன்று நாள்கள் கட்டி வைத்ததில் மஸ்ஜிதுன் நபவியில் தொழுகை மட்டுமல்லாமல் வேறு பல நிகழ்வுகளும் நடப்பதைப் பார்த்தார். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

மஸ்ஜிதுன் நபவி இயல்பாகவே தொழுகை நடத்தப்படுவதுடன் அல்லாமல் மதரஸாவாக, கல்லூரியாக, நீதிமன்றமாக, சீர்திருத்த மையமாக, ராணுவத் தளமாக நாடாளுமன்றமாக, சட்டமன்றமாக, நல்லிணக்க மையமாக, ஆலோசனை மன்றமாக, பைத்துல்மாலாக (பொது நிதிக் களஞ்சியமாக), அநாதைகளின் புகலிடமாக, அகதிகளின் முகாமாக, மருத்துவ முகாமாக, சிறுவர்களின் பூங்காவாக, வெளிநாட்டுத் தூதரக அலுவலகமாக, அறிவியல் ஆய்வு மையமாக, பசித்தோருக்கு இலவச உணவு வழங்கும் மையமாகச் செயல்படுவதைப் பார்த்துத்தான் இஸ்லாத்தின் விரோதியாக இருந்த ஸுமாமா மூன்றே நாளில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மட்டுமல்லாமல் நான்கு கலீஃபாக்களின் காலத்திலும் அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ஸ்பெயின், பாக்தாத், டமாஸ்கஸ், கூபா, எகிப்து ஆகிய எல்லாப் பகுதியிலும் உள்ள அத்தனை மஸ்ஜிதுகளும் இவ்வாறு தான் செயல்படக்கூடியதாக இருந்தன.

கொரானாவிற்குப் பின்னால் இப்போதைய மஸ்ஜிதுகளில் சுன்னத் வித்ர் தொழக் கூட, திக்ர் ஓதுவதற்குக் கூட கால அவகாசம் கொடுக்காமல் பள்ளிவாசலைப் பூட்டுவதற்காகச் சாவியைக் கையில் எடுப்பதைப் பார்க்கிறோம். அரபு தேசத்தில் மட்டுமல்லாமல் கலீஃபாக்கள் காலத்தில் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திலும் இஸ்லாம் பரவிய நேரத்திலும் மஸ்ஜிதுகளில் இதே முறைதான் பின்பற்றப்பட்டது.

1850இல் பிறந்த இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தனது சுயசரிதையில் ‘நான் முதன் முதலில் கல்வியைக் கற்றுக் கொள்ளத் தொடங்கியது பள்ளிவாசல் திண்ணையில் தான்’ என்று எழுதுகிறார். அவரது முதல் ஆசிரியர் ஒரு ஆலிம்.

இன்று லண்டனில், அமெரிக்காவில் படித்துவிட்டு வந்தால் பெருமையாக நினைக்கிறார்கள். அதைத் தங்கள் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் ஒரு நேரம் இருந்தது. உலகின் பல நாட்டு மாணவர்கள் ‘நான் பாக்தாதிலே படித்தேன். நான் ஸ்பெயினில் படித்தேன்’ என்று பெருமையாகச் சொல்வார்கள். இந்திய துணைக் கண்டத்தின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு தனது உலகச் சரித்திரம் என்ற நூலில் ‘இன்று அமெரிக்காவும் ஐரோப்பாவும் அறிவியலில் முன்னேறிவிட்டதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். அதற்கு அடித்தளமிட்டவர்கள் ஸ்பெயினில் ஆட்சி செய்த அப்பாசிய கலீஃபாக்கள்’ என்று எழுதியுள்ளார்.

அந்த மஸ்ஜிதின் திண்ணைகளிலே படித்து வெளிவந்த ஆளுமைகள் உலகின் தலைசிறந்த ஆளுமைகளாக, தலைசிறந்த விஞ்ஞானிகளாக இருந்தார்கள். அவிசின்னா என்று சொல்லப்படுகின்ற அபூ அலீ சீனா நரம்பியல் மருத்துவர். 30க்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை எழுதியவர். 1928இல் இங்கிலாந்து அரசு ஆங்கிலத்தில் அந்த நூல்களை மொழிபெயர்த்தது. இன்றைய நவீன மருத்துவத்திற்கும் அவரது நூல் தேவைப்படுகிறது. இவர் யார்? மஸ்ஜிதின் திண்ணையிலே பயின்றவர்.

அபுல் காசிம் அல் ஜஹ்ராவி முதன் முதலில் நரம்பியல் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தியவர். அல்ஃபாராபி

சமூக உளவியலை முறைப்படுத்தி உலகிற்குத் தந்தவர். முஹம்மது அல் ஹிந்தி, சுற்றுச்சூழல் அறிவியல் முன்னோடி. இன்றைக்கு நாம் போட்டிருக்கக்கூடிய கண்ணாடி, லென்ஸ், காட்சி ஒளி உணர்வு ஒளியியலின் தந்தை இப்னு ஹைத்தம். கேமராவை முதலில் கண்டுபிடித்தவர் ஒரு முஸ்லிம்.

கண் ஆபரேஷனை முதன் முதலில் வெற்றிகரமாகச் செய்து காண்பித்தவர் அர்ராஸீ ரேஜஸ். ஜாஃபிர் பின் ஹய்யான் ஃபாதர் ஆஃப் மாடல் கெமிஸ்ட்ரி.

இன்று வல்லாதிக்க நாடுகளாக இருக்கட்டும், வளர்ந்த நாடுகளாக இருக்கட்டும், மெட்ரிக் அமிலம், ஆர்சனிக் சல்பேட், சல்பர், அமோனியா இவையெல்லாம் இருந்தால் தான் அவர்களால் தொழில் துறைகளில் வல்லரசாக முடியும். 1200 ஆண்டுகளுக்கு முன்பே வெப்பம், குளிர், வறட்சி, பாதரசம், வெள்ளி, அலுமினியம், செம்பு அனைத்திலும் ஆராய்ச்சி செய்து ஆய்வு செய்து உலகிற்குத் தந்தவர்கள் எங்கே படித்தவர்கள்? முன்மாதிரி மஸ்ஜித்களிலே பயின்றவர்கள்.

முஹம்மது ஸஹ்ல் பின் அல்ஃபல்க்கி இயற்பியலின் முன்னோடி. அல்குவாரிஸ்மி கணிதவியலின் முன்னோடி. அல்பெரூனி வேதியியல், மானுடவியல் முன்னோடி. அல் ஹபீஸ் சோஷியல் சயின்ஸை உலகிற்குச் சொல்லித் தந்தவர். உலக வரைபடத்தை முதன் முதலில் வரைந்து காண்பித்தவர் அல் இத்ரீஸ். அறுவைச் சிகிச்சை என்றால் ஜோகானிட்டஸ் என்று எழுதி வைத்திருப்பார்கள். அவரது பெயர் இப்னு இஸ்ஹாக். கண்புரை அறுவை சிகிச்சை இப்போது 100 பேரில் 50 பேருக்கு நடக்கிறது. பத்தாம் நூற்றாண்டிலேயே கண் அறுவை சிகிச்சை செய்தவர் அல்மௌஸிராக்கி.

70 நகரங்கள், உலகின் பெரும் பெரும் மலைகளை ஆய்வு செய்து தட்பவெப்ப நிலையை ஆய்வு செய்து அட்ச ரேகை, தீர்க்க ரேகையைக் கண்டுபிடித்து எழுதியவர் இப்னு கல்தூன். இவர் எழுதியதைத்தான் இப்போதும் நவீன கல்வியாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். மக்கள் தொகை கணக்கெடுப்பது பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் தொகை சாதி வாரியாகக் கணக்கெடுக்க அரசு தயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கே ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கலாச்சாரத்தின்படி மக்கள் தொகை கணக் கெடுக்கப்பட்டது. பாபிலோனிய கலாச்சாரம், சிந்துச் சமவெளி கலாச்சாரம், இந்திய கலாச் சாரம், மத்திய கிழக்குக் கலாச்சாரம், எல்லா வற்றையும் வரையறுத்து எழுதியவர் இப்னு கல்தூன்.

இப்னு இராக்கி ஈஸா என்பவர் 130 வகையான கண் நோய்களைக் கண்டுபிடித்து எழுதி வைத்துள்ளார். குர்ஆனில் இல்லாத அறிவே கிடையாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இன்று உலகக் கல்வி, மார்க்கக் கல்வி என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு நேரம் இருந்தது. அப்போது இப்படி எல்லாம் பிரிக்கவில்லை. குர்ஆனிலிருந்து தான் இன்று எல்லா விஞ்ஞானிகளும் விஞ்ஞானத்தை நிரூபித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கல்வி எல்லாமே அந்த முன் மாதிரி மஸ்ஜிதுகளில் தான் கற்றுக் கொடுக்கப்பட்டது.

‘யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகிறார்களோ மேலும் தொழுகையை நிலைநாட்டி ஜகாத் கொடுக்கிறார்களோ மேலும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாமல் இருக்கின்றார்களோ அவர்கள் தான் இறை இல்லங்களை பராமரிப்பவர்களாக ஆக முடியும். அத்தகையவர்களே நேர் வழியில் செல்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்’ (திருக்குர்ஆன் 9:18)

மஸ்ஜிதுகளை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகிகள் அந்த மஸ்ஜிதை முன்மாதிரி மஸ்ஜிதாக, தங்களது மஹல்லாவை முன் மாதிரி மஹல்லாவாக மாற்றுவதற்கு முன் பாக அந்த மஸ்ஜிதை நிர்வகிக்கக்கூடிய தலைவர், செயலாளர், பொருளாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதைத்தான் அல்லாஹ் இந்த வசனத்திலே குறிப்பிட்டுள்ளான்.

ஈமானின் ஊற்றுக்கண்ணாக இருப்பது மஸ்ஜித் தான். மஸ்ஜித் நிர்வாகிகள் முதலில் தங்களுடைய ஈமானை உறுதியாக்கி, சரி யாக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் தான் நமக்குப் பொறுப்பைத் தருகின்றான், கண்ணியத்தைத் தருகின்றான், நோயைத் தருகிறான், அல்லாஹ் தான் குணப்படுத்து கின்றான், வியாபாரத்தைத் தருகிறான் என்று அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை அந்த மஸ்ஜித் நிர்வாகிகளுக்கு வரவேண்டும். பிறகு மஹல்லா மக்களுக்கு அந்த ஈமானிய உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நமது நோக்கம் இந்த உலகம் அல்ல! நாம் ஒவ்வொருவரும் மறுமையை நோக்கிப் பயணிக்கின்றோம். நீண்ட நெடிய முடிவில் லாத வாழ்க்கைக்காகத்தான் படைக்கப்பட்டுள் ளோம் என்ற மறுமைச் சிந்தனை இருக்க வேண்டும். நிர்வாகிகள் தாங்கள் தொழு வதோடு அந்த மஹல்லாவாசிகள் அனை வரையும் தொழுவதற்குத் தூண்ட வேண்டும். அந்தத் தொழுகை எப்படி இருக்க வேண்டும்? அனைத்து ஹராமான செயல்களையும் மானக் கேடான செயல்களையும் தடுக்கக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். இப்படிப் பட்ட தொழுகை முதலில் அந்த நிர்வாகி களுக்கு இருக்க வேண்டும். மஹல்லாவாசி களுக்கு இருக்க வேண்டும்.

பள்ளிவாசலில் பைத்துல்மால் (பொது நிதிக் களஞ்சியம்) இருக்க வேண்டும். ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கக் கூடிய, விதவைகளுக்கு வாழ்வளிக்கக்கூடிய மைய மாக பள்ளிவாசல் இருக்க வேண்டும். முதலில் ஜகாத்தை நிர்வாகிகள் கொடுக்க வேண்டும். பிறகு மஹல்லாவாசிகளிடம் ஜகாத் வசூலித்து முறையாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

முன்மாதிரி பள்ளிவாசலை உருவாக்கும் பணியில், சமுதாய மேம்பாட்டுக்காக பள்ளி யைத் தயார்படுத்தும் பணியில் ஈடுபடும் பொழுது, ‘போன நிர்வாகத்தில் இப்படி எல்லாம் இல்லையே! நீங்க புதிதாகச் சொல்கின்றீர்களே! போன நிர்வாகத்தில் எப்படிச் செய்தார்களோ அதே மாதிரி செஞ்சிட்டு போங்க’ என்று சொல்வதற்கு யாரேனும் வருவார்கள். அவர்களைப் புறந் தள்ளுங்கள். இந்தப் பொறுப்பு அல்லாஹ் எனக்குக் கொடுத்தது. நான் அல்லாஹ்வுக்கு மட்டும் தான் அஞ்சுவேன்.

அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய ரஸூலும் விரும்பிய வகையில் இந்தப் பள்ளி வாசலை உருவாக்கிக் காட்டுவேன் என்று செயல்படும் போது பல தடைகள் வரும். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சக் கூடாது. மஸ்ஜித் நிர்வாகிகளுக்கும் தலைவர்தான் இமாம். அந்த நிர்வாகிகளுக்கு முன்பாக இந்த விஷயங்களிலும் இமாம் தான் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் காலையில் கொஞ்ச நேரம் தங்கள் மனைவிமார்களிடம் செல் வார்கள் மீண்டும் மஸ்ஜிதுக்கு வந்து விடு வார்கள். மக்களின் பிரச்னைகளை அலசி ஆராய்வார்கள்.

தென்காசி மாவட்டத்தில் ஒரு சின்ன கிராமம். அங்கு நபி(ஸல்) அவர்களின் ஒரே ஒரு நபிவழியை மட்டும் இளம் வயது இமாம் பின்பற்றினார். யாரும் தொழ வர வில்லை என்றால், ‘ஏன் தொழ வரவில்லை’ என்று கேட்பார். யாரும் ஓதவில்லை என்றால் ஏன் ஓத வரவில்லை என்று விசாரிப்பார். உடல் நலம் சரியில்லை என்றால் போய் உடல் நலம் விசாரிப்பார். அவருடைய செயல்பாட்டை வைத்து பெரிய பெரிய பள்ளிகளில் இமா மாக அழைத்தார்கள். அவரை நாங்கள் விட்டுத் தர மாட்டோம் என்று சொல்லி கிராம வாசிகள் வீடு கட்டிக் கொடுத்து எல்லா வச திகளும் செய்து கொடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஒரே ஒரு நபிவழியைச் செயல்படுத்தியதற் காக அந்த இமாமை மக்கள் கொண்டாடு கிறார்கள் என்றால் முழுமையான முன்மாதிரி இமாமாக முழுமையான முன்மாதிரி நிர்வாகி களாக நாம் இருந்தால் கண்டிப்பாக நமது மஸ்ஜித் முன்மாதிரி மஸ்ஜித் ஆக மாறும். நமது மஹல்லா முன்மாதிரி மஹல்லாவாக ஆகும்.

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

AIM HIGH AIM FAR

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2(f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No: 5353A.1/2.20)

**LKG to XII Std**

+1 COURSES OFFERED

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

OPENING SOON

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

# வாக்குக்குப் பணமும்
# அரசின் இலவசங்களும்..!

**- சேயன் இப்ராகிம்**

**அண்மையில் நடந்து முடிந்துள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் முக்கியக் கட்சிகளான திமுகவும், அதிமுகவும் வாக்காளர்களுக்குப் பெரும் அளவில் பணம் கொடுத்துள்ளன. குறைந்தபட்சம் ஒரு வாக்குக்கு ரூ.500 என்று தொடங்கி அதிகபட்சமாக ரூ.10,000 வரை வழங்கப்பட்டிருக்கிறது. லாட்டரி அதிபர் மார்ட்டினின் மனைவி லீமா ரோஸ் போட்டியிட்ட லால்குடி பகுதியில் ஒரு வாக்குக்கு ரூ.10,000 கொடுக்கப்பட்டதாகவும், சிறப்பாகத் தேர்தல் பணியாற்றிய சில அதிமுக பகுதிச் செயலாளர்களுக்குத் தலா ஒரு கார் வழங்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. சில தொகுதிகளில் விஜயின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களும் வாக்குக்குப் பணம் கொடுத்துள்ளார்கள்.**

பல வாக்காளர்கள் இரண்டு கட்சிகளிலும் பணத்தை வாங்கிக் கொண்டு தவெகவுக்கு வாக்களித்துள்ளனர். வேறு பல வாக்காளர்கள் திமுகவுக்கு இரண்டு வாக்கு, அதிமுகவுக்கு இரண்டு வாக்கு எனப் பிரித்து வாக்களித்துள்ளனர். வாக்குக்குப் பணம் வேண்டாம் என ஒரு விழுக்காடு வாக்காளர்கள் கூடச் சொல்லவில்லை. நம்மிடம் கொள்ளையடித்த பணத்தைத் தானே தருகிறார்கள். அதனை வாங்குவதில் என்ன தவறு எனச் சில வாக்காளர்கள் வாதிட்டனர்.

நன்கு கற்றுணர்ந்த சில வாக்காளர்கள் நாங்கள் பணத்தை வாங்கிக் கொண்டோம். ஆனால் நாங்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. தேவையுள்ள வறியவர்களுக்குக் கொடுத்து விட்டோம் எனத் தெரிவித்தனர். பணத்தை வாங்கவில்லையென்றால் அதனைக் கொடுக்க வந்த கட்சிக்காரன் வைத்துக் கொள்வான். அப்படி ஏன் அவனிடம் பணத்தை விட வேண்டும் என்பது அவர்களின் வாதமாகும். பணம் வாங்க மறுத்த என்னைப் போன்ற சிலர் வீட்டுப் பெண்களிடம் வசை வாங்க வேண்டிய திருந்தது.

இந்தத் தேர்தலில் எங்கள் தொகுதியில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்க வந்த திமுக நிர்வாகிகள் அதனை முறையாக விநியோகிக்கவில்லை. சில வாக்காளர்களுக்கு ஒரு வாக்குக்கு ஆயிரம் ரூபாய், பல வாக்காளர்களுக்கு ரூ.750, ரூ.500 என விநியோகம் செய்தனர். அவர்களுக்கு ஆயிரம் ரூபாய், எங்களுக் கேன் 750, 500 என அந்த நிர்வாகிகளிடம் சண்டை போட்டனர். சில பகுதிகளில் வாக்காளர்களுக்குப் பணமே கொடுக்கப்படவில்லை. நிர்வாகிகள் சுருட்டிக் கொண்டதாக வாக்காளர்கள் குற்றம் சாட்டினர். பணம் கிடைக்கப் பெறாதவர்கள் நாங்கள் வாக்களிக்க வர மாட்டோம் என வெளிப்படையாக அறிவித்தனர். சில வாக்காளர்கள் எங்களுக்குப் பணம் கொடுக்காததால் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்து விட்டோம் எனத் தெரிவித்தனர்.

இன்னொருவர் பணம் தராததால் எங்கள் வீட்டிலுள்ள ஏழு வாக்குகளையும் விசிலுக்குப் போட்டு விட்டோம் எனத் தெரிவித்தார். இந்த வாக்காளர்கள் அனைவரும் திமுகவின் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்கக் கூடியவர்கள். (இந்த குளறுபடிகளையும் மீறி எங்கள் தொகுதியில் திமுக கூட்டணியின் மதிமுக வேட்பாளர் வெற்றி பெற்றது பெரும் வியப்பே!).

பொங்கலுக்கு அரசு ஒவ்வொரு ரேஷன் கார்டுதாரருக்கும் ரூ.3000 வழங்கியது. மார்ச்

மாதத்தில் மூன்று மாதங்களுக்குரிய மகளிர் உரிமைத் தொகை ரூ.3000, கோடைக்கால சிறப்பு நிதி ரூ.2000 என ஆக மொத்தம் ஐயாயிரம் ரூபாயை வங்கிக் கணக்கில் போட்டது. பெண்கள் பேருந்துகளில் இலவசப் பயணம் மேற்கொள்கிறார்கள். இது போன்ற பல பணச் சலுகைகளைப் பெற்றிருந்தும் அதனைத் தேர்தல் நேரத்தில் பல வாக்காளர்கள் மறந்து விட்டனர். வாக்களிக்க ஏன் பணம் தரவில்லை என்று கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டனர். என்ன அவலம் இது! பணம் ஒரு மனிதனை என்ன பாடு படுத்துகின்றது?

2016, 2021, 2026 ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களிலும், 2019-2024ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும், 2022ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும் எங்கள் பகுதியில் நான் தேர்தல் களப் பணியாற்றினேன். 2022ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின் போது மட்டுமே வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தனர். 2016, 2021 சட்டமன்றத் தேர்தலில் ஏழை வாக்காளர்களுக்கு அதுவும் பணத்தை எதிர்பார்த்தவர்களுக்கு மட்டுமே பணம் கொடுத்தனர். 2024 நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளர்களுக்குப் பணம் விநியோகம் செய்யப்படவில்லை.

அதன் காரணமாகப் பத்து விழுக்காட்டினர் வாக்களிக்க வரவில்லை. இது பிரதமர் மோடி வேண்டுமா? வேண்டாமா? என்பதை நிர்ணயிக்கும் தேர்தல் என்று எடுத்துக் கூறியும் அவர்கள் மனம் மசியவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது மாலை 5 மணிக்கு வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்த போது ஆறு ஓட்டுகள் உள்ள ஒரு குடும்பத்தினர் வாக்களிக்க வரவில்லை. ஒரு ஆட்டோவை அனுப்பி அவர்களை அழைத்து வரச் சொன்னோம். ஆனால் ஆட்டோ ஓட்டுநர் திரும்ப வந்து விட்டார். பணம் கொடுத்தால்தான் வாக்களிக்க வருவோம் என்று அந்தக் குடும்பத்தினர் கூறி விட்டார்களாம். நாங்கள் அதிர்ந்து போனோம். வாக்காளர்களின் இந்த நிலை ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல.

இந்த சட்டமன்றத் தேர்தலில் ஏற்பட்ட அனுபவங்கள் என்னைப் பெரிதும் சலிப்படையச் செய்தன. இனி எந்தத் தேர்தலிலும் வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கக் கூடாது. அது வாக்காளர்களை மேலும் ஊழல் படுத்தவே உதவும் என்பதே எனது திடமான கருத்து. முக்கிய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் வாக்குக்குப் பணம் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் மக்கள் அதனை வாங்கக் கூடாது. இது நடக்குமா? நடந்தால் தானே ஜனநாயகம் நிலைக்கும்.

### அரசின் இலவசங்கள்

கடந்த 25 ஆண்டுகளாக அரசியல் கட்சிகள் தேர்தல்களின் போது போட்டி போட்டுக் கொண்டு இலவசங்களை அறிவித்து வருகின்றன. தொலைக் காட்சிப் பெட்டி, மிக்சி, கிரைண்டர், டேபிள் பேன் போன்ற பயன்பாட்டுப் பொருள்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு வழங்குவோம் என கட்சிகள் தங்களது தேர்தல் அறிக்கை மூலம் மக்களுக்கு வாக்குறுதி அளிக்கின்றன. அளித்த வாக்குறுதிகளில் 50 விழுக்காட்டை ஆட்சிக்கு வந்த கட்சிகள் நிறைவேற்றியுள்ளன. கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலின் போது பெண்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம், பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குவோம் ஆகிய வாக்குறுதிகளை திமுக மக்களுக்கு அளித்தது. பெண்களுக்கான இலவச பேருந்துப் பயணம்



திமுக ஆட்சிக்கு வந்த உடனேயே நடைமுறைக்கு வந்தது. ஆனால் மகளிர் உரிமைத் தொகை இரண்டாண்டுகளுக்குப் பிறகே வழங்கப்பட்டது.

இந்த சட்டமன்றத் தேர்தலிலும் திமுக, அதிமுக, தவெக ஆகிய கட்சிகள் பல இலவசங்களை அறிவித்தன. திமுக மகளிர் உரிமைத் தொகையை இரண்டாயிரமாக உயர்த்தி வழங்குவோம் என அறிவித்தது. அதிமுகவும் அவ்வாறே அறிவித்தது. ஆனால் தவெக மகளிர் உரிமைத் தொகையை ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வழங்கப்படுமென அறிவித்தது. திமுக 8000 ரூபாய் பெறுமானமுள்ள கூப்பன் வழங்கப்படும். அதனைக் கொண்டு இல்லத்தரசிகள் தங்களுக்கு விருப்பமான வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம் என அறிவித்தது. அதிமுகவோ பத்தாயிரம் ரூபாய் பெண்களுக்கு வழங்கப்படும் என அறிவித்தது.

மேலும் அதிமுக குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படுமென்றும், ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் எனவும் அறிவித்தது. தவெகவோ ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தது. மேலும் அக்கட்சி மின் உபயோகத்தில் மாதம் 200 யூனிட்களுக்குக் கட்டணம் கிடையாது என அறிவித்தது. மாமன் சீர் வழங்கப்படுமென்றும், பிறக்கின்ற குழந்தைகளுக்கு ஐந்து கிராம் தங்க நகை வழங்கப்படுமென்று அக்கட்சி கூறியது. ஆட்சிக்கு வந்தவுடனேயே 200 யூனிட் இலவசமாக வழங்கப்படும் என்ற ஆணையில் முதல்வர் விஜய் கையெழுத்திட்டார்.

எங்களுக்கு இப்படி இலவசங்களை வழங்குங்கள் என்று வாக்காளர்கள் யாரும் கேட்கவில்லை! அரசியல் கட்சிகளே இந்த இலவசங்களை அறிவிக்கின்றன. சில இலவச வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றன. சிலவற்றை நிறைவேற்றுவதில்லை. மக்கள் விரும்புவதெல்லாம் லஞ்சம் இல்லாத அரசு நிர்வாகம், குடிதண்ணீர் வசதி, சாலைகளை முறையாகப் பராமரித்தல் போன்ற வாழ்வாதாரப் பிரச்னைகளின் தீர்வு மட்டுமே. ஆனால் இவற்றை ஆட்சியாளர்களால் நிறைவேற்ற முடியவில்லை. எனவே இலவசங்களை வழங்கி மக்களை மடைமாற்றம் செய்ய முயற்சிக்கின்றனர்.

இந்த இலவசங்களை வழங்க அரசு பெருமளவு செலவு செய்ய வேண்டியதுள்ளது. உதாரணமாக மகளிர் உரிமைத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 13000 கோடி செலவு செய்கிறது. பொங்கலின் போது வழங்கப்படும் சிறப்பு உதவி நிதிக்கு சில நூறு கோடிகள் தேவைப்படுகின்றன. கல்வி, பொது சுகாதாரம், சாலைகள் பராமரிப்பு போன்ற முக்கியப் பணிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியைக் குறைத்தே இந்த இலவசங்களுக்கு அரசு நிதி ஒதுக்கி வருகிறது. அரசின் பல்வேறு துறைகளில் இருக்கின்ற காலி பணியிடங்களை நிரப்ப அரசிடம் பணம் இல்லை. இந்த இலவசங்களுக்கு வழங்கப்படும் நிதியை காலி பணியிடங்களை நிரப்பப் பயன்படுத்தினால், பல குடும்பங்கள் பயன் பெறும்.

இலவசங்களை வழங்கினால் வெற்றி உறுதியா? என்றால் இல்லை. இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிய பிறகும் கலைஞர் கருணாநிதியால் 2011ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வர இயலவில்லை. பல்வேறு இலவசங்களை அறிவித்துச் செயல்படுத்திய மு.க. ஸ்டாலினால் இம்முறை மீண்டும் ஆட்சிக்கு வர இயலவில்லை. அவரே கொளத்தூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்து விட்டார். இலவசங்கள் வெற்றியை அளிக்காது என்பதே கசப்பான உண்மை. அரசியல் கட்சிகள் இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதும், வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல் கட்சிகள் இலவசங்களை அளிப்பதும் ஒரு வகையில் பார்த்தால் மிகப் பெரிய ஊழல். இனியாவது அரசியல் கட்சித் தலைவர்களும், வாக்குக்குப் பணம் பெறும் வாக்காளர்களும் திருந்துவார்களா? என்று பார்க்க வேண்டும்.





# ரிஃபா வர்த்தக சபையின் ஆண்டு மாநாடு – 2026

சென்னை வானகரம் கே.எம். ஸ்பெக்ட்ராவில் 16.05.2026 அன்று காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை ரிஃபா வர்த்தக சபையின் ஆண்டு மாநாடு உற்சாகத்துடன் நடைபெற்றது. ரிஃபா மாநிலத் தலைவர் யூனுஸ் சேட் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. தமிழ்நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் தொழில் முனைவோர்கள் கலந்து சிறப்பித்தனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து 500 இளம் தொழில் முனைவோர்கள், வணிகத் தலைவர்கள், தன்னார்வலர்கள், பேச்சாளர்கள் பங்கு பெற்றனர்.

15 அனுபவம் மிக்க தொழில் முனைவோர்கள் ஊக்கமும் உற்சாகமும் தரும் உரைகளை நிகழ்த்தினர். தலைமைத்துவம், தொழில்முனைவு, அறநெறி சார்ந்த வணிகம் குறித்த கலந்துரையாடல்கள், சமூக மேம்பாடு, தொழில் துறையில் மகளிர் பங்கெடுப்பு, மாநிலத்தின் வளர்ச்சி, நமது நாட்டின் வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் முழு நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பெண்களும், இளைஞர்களும் கணிசமான அளவில் பங்கு பெற்றனர்.

ரிஃபா வர்த்தக சபை வணிகங்களுக்கு வலுவூட்டுவதற்கும், சமூகத்தில் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கும் ஏற்படுத்தப்பட்ட வேகமாக வளர்ந்து வரும் ஒரு வணிக வலையமைப்பு ஆகும். இந்தியாவில் 18க்கும் மேற்பட்ட மாநிலங்களில் கிளைகளுடனும், தமிழ்நாட்டில் 10க்கும் மேற்பட்ட கிளைகளுடனும் செயல்பட்டு வருகிறது.

வணிகத்தின் வளர்ச்சிக்கு பெண்களை விளம்பரப் பொருளாகக் காட்சிப்படுத்தாமல் மூன்று தலைமுறையாக வெற்றிக் கொடி நாட்டிய LKS நிறுவனத்தின் தலைவர் செய்யது அஹமது, ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து கல்வி வளர்ச்சி, பெண்கள் மேம்பாட்டுக்காக பாடுபட்ட சையத் நவாஸ், ஏழ்மை நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி Image king என்ற நிறுவனத்தை உருவாக்கிய மசூத் கான், நடைபாதை வியாபாரியாகத் தொடங்கி இன்று சர்வதேச அளவில் Custom Tailor Suit Designer வணிகம் செய்யும் மிஜாஜ் ராஃபி, நடை பாதை சமோசா வியாபாரி என்ற நிலையில் இருந்து படிப்படியாக உயர்ந்து இன்று Frozen Food Manufacturerஆக வளர்ந்துள்ள ஹாஜா புன்யாமீன் ஆகிய வணிகர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

பெண்கள் தொழில் முனைவு, தலைமைப் பொறுப்புக்களில் அடியெடுத்து வைக்க ஊக்குவிக்கும் வகையில் Cake Square நிறுவனத்தின் ஸ்தாபகர் ஜானகி மாயா உரை அமைந்தது. வட்டியை விட வணிகமே சிறந்தது என்ற தலைப்பில் டாக்டர். அஜ்மல் தஸ்தகீர் உரையாற்றினார். உலகளாவிய வணிகக் கூட்டணிகளை உருவாக்குவதில் சிறந்த பங்காற்றி வரும் மலேசியாவைச் சார்ந்த டத்தோ.வீரா ஷாஹுல் உரை நிகழ்த்தினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பயீ தமிழ்நாட்டு வளர்ச்சியில் முஸ்லிம்களுக்கான ஜமாஅத்தின் தொலைநோக்குப் பார்வை குறித்து உரை நிகழ்த்தினார்.

மாநாட்டில் உத்வேகம் அளிக்கும் முக்கிய அமர்வுகள், வணிகத் தொடர்புகளுக்கான வாய்ப்புகள், சமூக மேம்பாட்டுக் கலந்துரையாடல்கள், விருதுகள், தொழில் முனைவோருக்கான அங்கீகாரங்கள், நெறிமுறை சார்ந்த வணிக நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு, நவீன வணிக உத்திகள் குறித்த உரைகள், வணிகத்தில் வெற்றி பெற தேவைப்படும் வழிகாட்டல்கள் சிறப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டது. இறுதியாக ஜவாதின் நன்றி உரையுடன் விழா நிறைவடைந்தது.

**– ஹஸன் கனி**

# இஸ்லாமிய இலக்கிய உலகின் முத்திரை நாயகன்

# ஜே.எம். சாலி

மிகச் சிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகையாசிரியராகவும் திகழ்ந்த ஜே.எம். சாலி அவர்களின் மரணம் இஸ்லாமிய இலக்கிய உலகிற்குப் பெரும் இழப்பாகும்.

சுமார் 400க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 300 நாவல்களையும், 80 நாடகங்களையும் 200க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இரவாஞ்சேரி என்ற எழில்மிகு சிற்றூரில் 10.04.1939 அன்று ஜமாலுதீன் - காத்தூன் பீவி தம்பதியினரின் மகனாக ஜே.எம்.சாலி பிறந்தார். இவரைப் போலவே இவரது மூத்த சகோதரர்களான ஜே.எம்.அபூபக்கரும் (இப்னு ஜமாலுதீன்), ஜே.எம்.ஹுஸைனும் மிகச் சிறந்த எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் திகழ்ந்தனர்.

தொடக்கக் கல்வியை இரவாஞ்சேரியிலேயே கற்றுத் தேறிய ஜே.எம். சாலி, பட்டப்படிப்பை கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரியிலும் முதுநிலை பட்டப் படிப்பை சென்னை மாநிலக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். கல்லூரிப் பேராசிரியர் பணியில் சேர்ந்திட அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத காரணத்தால் சென்னை அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் தணிக்கையாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

ஜே.எம்.சாலி பள்ளிப் பருவத்திலேயே எழுத்தாற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார். 1955ஆம் ஆண்டு தனது 16ஆவது வயதிலேயே கலைமகள் மாத இதழில் சிறுகதைகள் எழுதினார். சிறுவர் வார இதழான கண்ணன் இதழிலும் சிறுகதைகள் எழுதினார். தொடக்கத்தில் சிறுவர்களுக்கான கதைகளையே எழுதினார். கும்பகோணம் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது ஆனந்த விகடன் இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் நெருப்பு என்ற கதையை எழுதிப் பரிசு பெற்றார்.

சில ஆண்டுகளிலேயே முன்னணி எழுத்தாளராக உருவெடுத்தார். முஸ்லிம் இதழ்களான மணி விளக்கு, முஸ்லிம் முரசு, பிறை ஆகிய இதழ்களிலும் இவர் சிறுகதைகள் எழுதினார். இச்சிறுகதைகள் பெரும்பாலும் முஸ்லிம்களின் வாழ்வியலை மையப் பொருளாக வைத்து எழுதப்பட்டவையாகும்.

இவரது எழுத்துத் திறமையை அறிந்து கொண்ட சிங்கப்பூர் தமிழ் முரசு நாளிதழ் அந்த இதழின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்குமாறு இவரைக் கேட்டுக் கொண்டது. அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட அவர் சிங்கப்பூர் சென்று அந்த இதழின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் அவர் அதில் பணியாற்றினார். இந்த இதழில் ‘முரசொலி’ என்ற தலையங்கப் பகுதியில் இவர் எழுதிய தலையங்கங்கள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பல தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று பயணித்து தனது பயண அனுபவங்களையும் அந்த இதழில் எழுதி வந்தார்.

சிங்கப்பூரில் தமிழ் முரசு நாளிதழில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த புகழ் பெற்ற ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவினர் அந்த இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணியாற்ற அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட அவர், 1971ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து அந்த இதழின் துணையாசிரியராகப் பொறுப்பேற்றார். அந்த இதழில் பல முத்திரைக் கதைகளை எழுதினார். ஆத்மா, வெளிச்சம், தரையில் விழுந்த மீன், அனுலாவின் படகு, மகரந்தம் ஆகியன இவர் எழுதிய முத்திரைக் கதைகளாகும்.

அலைகள் பேசுகின்றன, கனாக் கண்டேன் தோழி, சொல்லித் தெரிவதில்லை, அழைக்கும் விழிகள், மலர் மஞ்சம் ஆகியன இவர் இந்த இதழில் எழுதிய நாவல்களாகும். இந்த இதழ் வெளியிட்ட சிங்கப்பூர், மலேசியா சிறப்பு மலர்கள், ஹஜ் சிறப்பிதழ், விகடன் பொன்விழா மலர் ஆகியன இவரின் கைவண்ணத்தில் பொலிவு பெற்றுத் திகழ்ந்தன. விகடன் இதழில் இவர் பணியாற்றிய காலம் இவரது எழுத்துலகின் பொற்காலம் எனலாம். இந்த இதழ் மூலமாகவே இவரது எழுத்துப் பணிகள் தமிழ் இலக்கிய உலகிற்குத் தெரிய வந்தன.



ஜே.எம். சாலி

12 ஆண்டுகள் ஆனந்த விகடனில் துணையாசிரியராகப் பணியாற்றிய அவர் மீண்டும் சிங்கப்பூர் சென்று தமிழ் முரசு நாளிதழின் ஆசிரியர் குழுவில் இணைந்தார். முஸ்லிம் புலவர்களின் இலக்கியத் தொண்டினை விரிவாக விளக்கும் இஸ்லாமும் தமிழும் என்ற தொடரை அந்த இதழில் எழுதினார். அந்தக் காலகட்டத்தில் சிங்கப்பூர் ஒளிபரப்புக் கழகத்தின் ஆசிரியராகவும் பொறுப்பு வகித்தார். வானொலி, தொலைக்காட்சிகளுக்காகச் செய்திகளைத் தொகுத்து வழங்கும் பணியில் ஈடுபட்டார்.

குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலீ, நடிகர் புரூஸ்லி, கால்பந்து மன்னன் பீலே, உகாண்டா நாட்டு மன்னர் இடி அமீன் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள இவர், இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள், தமிழகத்துத் தர்காக்கள், இந்திய வேதங்கள் போற்றும் நபிகள் நாயகம், கண்ணியமிகு காயிதே மில்லத், அறிஞர் அண்ணாவின் மீலாது சொற்பொழிவுகள், நவீன சிங்கப்பூரின் தந்தை லீக் வான் யூ, செந்தமிழ்த் திருநாடு சிங்கப்பூர் ஆகிய நூல்களையும் எழுதி உள்ளார்.

சமநிலைச் சமுதாயம் மாத இதழில் ‘இலக்கிய இதழியல் முன்னோடிகள்’ என்ற தலைப்பில் ஒரு நீண்ட தொடரை எழுதினார். இந்தத் தொடரில் தமிழ்நாட்டில் இதழியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கிய 64 முஸ்லிம் ஆளுமைகள் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

மலேசியா வானொலிக்காக அவர் சில நாடகங்களையும் தயாரித்துள்ளார். மாநாடுகளிலும், இலக்கியக் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

தன்னுடைய வாழ்வின் இறுதிப் பகுதியை அவர் சிங்கப்பூரிலேயே கழித்தார். அங்கு மருத்துவராகப் பணியாற்றி வரும் அவரது மகன் முஹம்மது ஜாவீத்துடன் வசித்து வந்தார். சிங்கப்பூரில் இருந்த காலத்திலும் அவர் தனது இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவந்தார்.

மிகவும் நலிவுற்ற நிலையில் அவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நீடூரிலுள்ள தனது உறவினர் இல்லத்தில் தங்கியிருந்தார். 15.5.26 அன்று இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே மீளக் கூடியவர்களாய் இருக்கிறோம்).

20ஆம் நூற்றாண்டு முஸ்லிம் எழுத்தாளர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் எழுத்தாளர் ஜே.எம்.சாலி. அவரது இறப்பு இலக்கிய உலகிற்குப் பெரிய இழப்பாகும். இறைவன் அவரது பிழைகளை மன்னித்து அவருக்கு சுவன பாக்கியத்தை வழங்கவும் பிரார்த்திக்கின்றோம்.

**– சேயன்**



# காதல்

## – ஓர் இஸ்லாமியப் பார்வை

• ரிஃபாயுதீன்

இன்று உலகம் முழுவதும் காதல் என்ற பெயரில் ஒரு பெரும் வணிகமும், கலாச்சாரச் சீரழிவும் அரங்கேறுவதைப் பார்க்கிறோம். காதலர் தினம்(Valentine's Day) என்ற பெயரில் காதலை ஒரு நாள் கொண்டாட்டமாகவும், பரிசுப் பொருட்களின் பரிமாற்றமாகவும், வரம் பற்ற இச்சைகளின் வெளிப்பாடாகவும் சுருக்கி விட்டார்கள்.

2025 பிப்ரவரி 14இல் மட்டும் இந்தியாவில் ₹13,500 கோடி மதிப் பிலான கேக்குகள் வெட்டப்பட்டன. ஆன்லைன் டெலிவரி நிறுவனங் களான Zomato, Blinkitஇல் நிமிடத் திற்கு 400க்கும் மேற்பட்ட சாக்லேட் டுகள் ஆர்டர் செய்யப்பட்டன. ஆய்வு களின்படி, 30% இளைஞர்கள் காதலர் தினப் பரிசுகளை வாங்குவதற்காகவே கடன் அட்டையில் (Credit Card) கடன் வாங்குகிறார்கள்.

### இஸ்லாமும் காதலும்

இஸ்லாம் காதலை வெறுக்கிறதா? இல்லை! இஸ்லாம் காதலைக் கொண்டாடு கிறது. ஆனால் அது கண்ணியமான, பாது காப்பான திருமண பந்தத்திற்குள் இருக் கும் காதல். இன்றைய நவீன உலகம் சொல்லிக்கொடுக்கும் மேலோட்டமான காதலை விட 1400 ஆண்டுகளுக்கு முன்பே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய காதல் ஆழமானது, அர்த்தமுள்ளதாகும்.

### ஆண் – பெண் கண்ணியம்: குர்ஆன் சொல்லும் பாடம்

இஸ்லாத்தில் பெண்ணுரிமை அல்லது ஆடைக்கட்டுப்பாடு பற்றிப் பேசும் போதெல்லாம் விரல்கள் பெண்கள் பக்கமே நீட்டப்படுகின்றன. ஆனால் திருக்குர்ஆன் முதலில் ஆண்களுக்கே கடிவாளம் இடு கிறது.

பெண்கள் ஹிஜாப் அணிவதற்கு முன்பே, ஆண்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று இறைவன் கட்டளையிடுகிறான்.

‘(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வை களைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களு டைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும்’ (திருக்குர்ஆன் 24:30)

ஆண்களைப் பெண்களின் பாதுகாவலர் களாக(Protectors) திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகிறான். ஓர் ஆண், பெண்ணின் கண்ணியத்தைக் காக்கும் கேடயமாக இருக்க வேண்டும், அவளைப் போகப் பொருளாகப் பார்க்கும் வேட்டைக்காரனாக அல்ல.

## திருக்குர்ஆன் சொல்லும் காதல் ஃபார்முலா பதற்றம் அல்ல, அமைதி

இன்றைய நவீன காதல் (Modern Romance) பல நேரங்களில் பதற்றத்தைத்தான் பரிசாகத் தருகிறது. அவன் / அவள் என்னை ஏற்றுக்கொள்வார்களா?, பரிசு பிடிக்கா விட்டால் என்ன செய்வது?, பிரிந்து விடுவார்களா? என்ற பயம் கலந்த பதற்றம் அது. ஆனால் காதலை அல்லாஹ், திருக் குர்ஆனில் (30:21) திருமண உறவுக்கான நோக்கத்தைச் சொல்லும்போது ஓர் அற்புத மான வார்த்தையைப் பயன்படுத்துகிறான்: 'லிதஸ்குனூ இலைஹா' (Li Taskunu Ilayha) - அதாவது அவர்களிடம் நீங்கள் மன அமைதி (சகீனா) பெறுவதற்காக..!' (திருக்குர்ஆன் 30:21)

'இன்னும் உங்களுக்காக உங்களிலிருந்தே மனைவியரை அவன் படைத்திருப்பதும்; அவர்களிடத்தில் நீங்கள் அமைதி பெறுவதற்காவும்; உங்களுக்கிடையே அன்பையும்(Mawaddah), கருணையையும்(Rahmah) உண்டாக்கியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும்' (திருக்குர்ஆன் 30:21)

அன்பு(Mawaddah), கருணை(Rahmah) ஆகியவற்றை அல்லாஹ் ஏற்படுத்துவது உண்மைதான். ஆனால் அந்த அன்பின் அடிப்படை நோக்கம் 'சகீனா' எனும் மன நிம்மதிதான்.

காதலர் தினம், உன்னைப் பிடித்திருக்கிறது (I love you) என்று சொல்ல வைக்கிறது. ஆனால் இஸ்லாம் உனக்காக நான் இருக்கிறேன் (I am committed to you) என்று சொல்ல வைக்கிறது. மேலும், திருமண பந்தத்தை மீஸாக்கன் கலீஸா(Mithaqan Ghaliza) மிக உறுதியான உடன்படிக்கை (திருக்குர்ஆன் 4:21) என்று அல்லாஹ் வர்ணிக்கிறான். காதல் என்பது வெறும் உணர்வு (Feeling) மட்டுமல்ல, அது ஒரு பொறுப்பு உணர்வு (Responsibility) என்பதை இது உணர்த்துகிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ் பேருரையின் போது, ஒட்டு மொத்த சமூகத்திற்கும் வழங்கிய மிக முக்கியமான அறிவுரை பெண்களைப் பற்றியதுதான். 'பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வுடைய அமானிதமாகவே நீங்கள் அவர்களைத் திருமணம் செய்துள்ளீர்கள்' என்றார்கள்.

கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் குறிப்பிடும்போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் உண்ணும் போது அவளுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் அணியும்போது அவளுக்கும் ஆடை அணியக் கொடுங்கள்' (நூல்: அபூதாவூத்)

### இனிமையான 10 வழிமுறைகள்

இன்றைய திரைப்படங்களும் நாவல்களும் கற்பிக்காத ஆனால் வாழ்க்கைக்கு உயிரூட்டும் உண்மையான காதலை நபி(ஸல்) அவர்களின் வாழ்வில் நாம் காணலாம்.

### 1. மனைவியுடனான ஆன்மிகத் தொடர்பு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுகைக்குப் பிறகு, தனது மனைவியரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஸலாம் கூறி நலம் விசாரிப்பார்கள். தப்ரானி நூலில் இடம்பெறும் குறிப்பின்படி, நபி(ஸல்) அவர்கள் தங்கள் மனைவிக்காகத் துஆச் செய்வார்கள். இதுவும் ஒரு நபிவழிதான். இன்று நம்மில் எத்தனை பேர் நம் மனைவிக்காக இறைவனிடம் கையேந்துகிறோம்?

### 2. செவிசாய்த்தல்(Listening) – சிறந்த தோழமை

ஒருமுறை அன்னை ஆயிஷா(ரலி), அறியாமைக் காலத்துப் பெண்கள் தங்கள் கணவன்மார்களைப் பற்றிப் பேசிய கதையை (உம்மு ஸர் - அபூ ஸர் கதை) மிக நீண்டதாக விவரித்தார்கள். நபி(ஸல்) அவர்கள் அலுத்துக்

கொள்ளாமல் முழுமையாகக் கேட்டார்கள். முடிவில், ‘அபூஸர் தன் மனைவிக்கு எப்படி இருந்தாரோ, அதுபோல நான் உனக்கு இருப்பேன்’ என்று அன்பொழுகக் கூறினார்கள். அதேபோல், ஆயிஷா(ரலி), ஹப்ஸா(ரலி) ஆகியோருடன் நபி(ஸல்) அவர்கள் நடைப்பயிற்சி செல்வதும் வழக்க மாக இருந்தது.

### 3. காதலை வெளிப்படுத்துதல் (Expressing Love)

அம்ரு இப்னு ஆஸ்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம், ‘உங்களுக்கு மக்களில் மிகவும் விருப்பமானவர் யார்?’ என்று கேட்டபோது, எந்தத் தயக்கமுமில் லாமல், ‘ஆயிஷா’ என்று பதிலளித் தார்கள். ‘ஆண்களில்’ என்று கேட்டபோது ‘அவருடைய தந்தை (அபூபக்கர்)’ என் றார்கள்.

நம்மில் எத்தனை பேருக்கு தம் மனைவி யின் தந்தை நெருக்கமானவர் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். மனைவி இறந்த பிறகும் நேசிப்பது நபிவழி. அன்னை கதீஜா(ரலி) இறந்த பிறகும், அவர் களின் தோழிகளுக்கு அன்பளிப்புகளை அனுப்பி அவர்களை நினைவு கூர் வார்கள்.

### 4. சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுதல்

ஒருமுறை அபிசீனிய இளைஞர்கள் பள்ளி வாசலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அன்னை ஆயிஷா(ரலி) அதைப் பார்க்க விரும்பினார்கள். நபி(ஸல்) அவர்கள், ஆயிஷா(ரலி) தன் தாடையை நபியின் தோளில் வைத்துப் பார்க்கும் அளவிற்கு வசதி செய்து கொடுத்தார்கள். ‘போதும், போகலாமா?’ என்று கேட்காமல், ‘பார்த்தது போதுமா?’ என்று அன்பாகக் கேட்டு, அவர் மன நிறைவடையும் வரை பொறுத்திருந் தார்கள்.

### 5. முத்தமும் அரவணைப்பும்

உர்வா இப்னு சுபைர்(ரலி) அறிவிக் கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் தொழுகைக் குச் செல்லும் முன் மனைவியை முத்தமிட்டுச் செல்வார்கள். இதைச் சொல்லும்போது அன்னை ஆயிஷா(ரலி) வெட்கப்பட்டுச் சிரித் தார்கள். (நூல்: இப்னு மாஜா).

அஸர் தொழுகைக்குப் பிறகு மனைவி யரைச் சந்தித்து அன்பை வெளிப்படுத்துவது நபியின் வழக்கம்.

### 6. உதவி செய்தல் (Helping Hand)

நபி(ஸல்) அவர்கள் சிறந்த கணவர் மட்டுமல்ல, சிறந்த உதவியாளரும் கூட. அன்னை ஸஃபிய்யா(ரலி) ஒட்ட கத்தில் ஏற சிரமப்பட்டபோது, நபி(ஸல்) அவர்கள் தம் முழங்காலைத் தாழ்த்தி, அதில் ஏறி ஒட்டகத்தில் அமர உதவினார்கள். மேலும் தம் மேலங்கியை ஒட்டகத்தின் சேணத்தில் மெத்தையாக விரித்துக் கொடுத்தார்கள். இன் றைய உலகில் ஒருவன் தன் மனைவிக்காக ஒரு கார் கதவைத் திறக்கிறான் என்றால், அந்தக் கார் அல்லது மனைவி புதிதாக இருக்க வேண்டும்.

**இஸ்லாத்தில் பெண்ணுரிமை அல்லது ஆடைக்கட்டுப்பாடு பற்றிப் பேசும் போதெல்லாம் விரல்கள் பெண்கள் பக்கமே நீட்டப்படுகின்றன. ஆனால் திருக்குர்ஆன் முதலில் ஆண்களுக்கே கடிவாளம் இடுகிறது.**

### 7. ஆறுதல் அளித்தல் (Consoling)

மனைவி நோயுற்றால் நபி(ஸல்) அவர்கள் மிக மென்மையாகப் பேசுவார்கள். ஆயிஷா(ரலி) நோய்வாய்ப் பட்டபோது, ஷிஃபாவிற்கான (நிவாரணம்) துஆவை ஓதி ஆறுதல்படுத்துவார்கள். ஒரு பயணத்தில் ஸஃபிய்யா(ரலி) அவர்களின் ஒட்டகம் விழுந்த போது, அவர் அழுதார். நபி(ஸல்) அவர்கள் உடனே ஒட்டகத்தைச் சரி செய்யப் போகவில்லை; முதலில் தன் கைகளால் மனைவியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினார்கள்.

**நம்மில் எத்தனை பேருக்கு தம் மனைவியின் தந்தை நெருக்கமானவர் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். மனைவி இறந்த பிறகும் நேசிப்பது நபிவழி. அன்னை கதீஜா(ரலி) இறந்த பிறகும், அவர்களின் தோழிகளுக்கு அன்பளிப்புகளை அனுப்பி அவர்களை நினைவு கூர்வார்கள்.**

### 8. உணவில் இணக்கம்

அன்னை ஆயிஷா(ரலி) ஒரு பாத்திரத்தில் நீர் அருந்தினால், அவர் வாய் வைத்த அதே இடத்தில் நபி(ஸல்) அவர்கள் வாய் வைத்து அருந்துவார்கள். இறைச்சித் துண்டைக் கடித்தால், அதே இடத்தில் கடித்து உண்பார்கள். இறுதித் தருவாயில் கூட, ஆயிஷா(ரலி) மென்று கொடுத்த மிஸ்வாக்கையே நபி(ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள்.

### 9. விருந்தில் இணைந்தே செல்லுதல்

ஒரு பாரசீக அண்டை வீட்டார், தான் சமைத்த சூப்பை உண்ண நபி(ஸல்) அவர்களை அழைத்தார்கள். நபி(ஸல்) அவர்கள், 'என் மனைவி (ஆயிஷா) வரலாமா' என்று கேட்டார்கள். அவர், 'இல்லை' என்றதும், நபி (ஸல்) அவர்கள் மறுத்துவிட்டார்கள். பிறகு அந்த நபர் இருவரையும் அழைத்த பிறகே அந்த விருந்துக்குச் சென்றார்கள். (நூல்: முஸ்லிம்). தனிமையில் ருசிப்பதை விட, துணையோடு ருசிப்பதையே நபி(ஸல்) விரும்பினார்கள்.

### 10. முதுமையிலும் விளையாட்டு

ஒருமுறை அன்னை ஸவ்தா(ரலி) வீட்டிற்கு வந்திருந்தபோது, காய்கறி சூப் தயாரித்தார்கள். அன்னை ஆயிஷா(ரலி) வேண்டாம் என்று மறுக்க, விளையாட்டாக முகத்தில் பூசினார்கள். நபி(ஸல்) அவர்கள் அதைத் தடுக்காமல், சிரித்துக்கொண்டு ஆயிஷாவையும் திருப்பிப் பூசச் சொன்னார்கள். அப்போது உமர்(ரலி) அவர்களின் குரல் கேட்கவே, இருவரும் ஓடிச் சென்று முகத்தைக் கழுவினார்கள்.

### உமர் (ரலி) அவர்களின் அறிவுரை

வீட்டில் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உமர்(ரலி) அவர்கள் அழகான ஓர் இலக்கணம் வகுத்தார்கள்:

'ஓர் ஆண், தன் குடும்பத்தாரிடத்தில் ஒரு சிறுபிள்ளையைப் போல (மென்மையாக, விளையாட்டாக) இருக்க வேண்டும். ஆனால் அவசியமான நேரங்களில், ஓர் ஆணாக (வீரனாக/பொறுப்பானவனாக) நடந்து கொள்ள வேண்டும். (ஷுஅப் அல் ஈமான் 7851)

இன்றைய Split AC போல வெளியே கடினமான வெயிலைத் தாங்கும் இயந்திரமாகவும், உள்ளே குளுமையைத் தரும் கருவியாகவும் கணவன் இருக்க வேண்டும். காதலர் தினம் என்ற பெயரில் ஒரு நாள் கூத்து நடத்துவதை விட்டுவிட்டு, ஆயுள் முழுவதும் அன்பைப் பொழியும் நபிவழிக் காதலை நம் வீடுகளில் மலரச் செய்வோம். ஹலாலான காதலே அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் ஒரே வழி!



# தன் கையே
# தனக்கு உதவி

● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

*'ஒருவர் மற்றொருவரின் பாவத்தைச் சுமக்க மாட்டார்' ( திருக்குர்ஆன் 53:38)*

*'மேலும் மனிதனுக்கு அவன் முயன்றது அல்லாமல் வேறொன்றும் (கிடைப் பது) இல்லை' (திருக்குர்ஆன் 53: 39)*

திருக்குர்ஆனின் இந்த இரண்டு வசனங்களும் சொல்லும் செய்திகள் என்ன?

ஒருவருக்கு மறுமையில் அவர் செய்த முயற்சிகள், உழைப்புகள் போன்ற வற்றின் பலன்களைத் தவிர வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை; பயன ளிக்கவும் போவதில்லை. ஒருவர் செய்த நன்மைகளோ அல்லது தீமைகளோ அவர் ஈட்டியவற்றின் விளைவுகளை மட்டுமே அவர் சந்திக்க வேண்டியிருக்கும். முயற்சி நன்மையின் பக்கம் அமைந்திருந்தால் நன்மை கிடைக்கும்; தீமையின் பக்கம் அமைந்திருந்தால் தீமை கிடைக்கும். ஒருவரின் நன்மையை மற்றவர் பெற மாட்டார்; ஒருவர் மற்றவரின் பாவத்தைச் சுமக்கவும் மாட்டார்.

இந்த வசனம் ஒவ்வொரு தனிமனிதனின் பொறுப்புக்கூறலை (Individual Res ponsibility and Accountability) விளக்குகிறது; ஒவ்வொரு மனிதனும் தன் செயல் களுக்குத் தானே பொறுப்பானவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. அப்படியானால் பிறர் நமக்காகச் செய்யும் நற்காரியங்கள் நமக்குப் பயனளிக்காதா?

மேற்கண்ட வசனங்கள் ஒவ்வொரு மனிதனும் தன் முயற்சி, செயலால் மட்டுமே பயன் அடைவான் என்பதையே வெளிப் படையாகச் சொல்லுகின்றன. ஆனால் விதி விலக்காக, சில சந்தர்ப்பங்களில் மற்றவர் களின் செயல்களால் ஒருவருக்குப் பயன் கிடைக்கலாம்.

உதாரணமாக நல்ல ஸாலிஹான பிள்ளை களின் துஆ, அவர்கள் செய்யும் தர்மங்கள் போன்ற நற்காரியங்களைக் குறிப்பிடலாம். அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் அவர வர் முயற்சிக்கு உரிய பயனே கிடைக்கும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்ட வசனங்கள் நமக்குச் சொல்லும் மற்றொரு முக்கியமான செய்தியும் உண்டு. ஒருவர் வெறும் சுபமான எண்ணங்களுடனும், எதிர்பார்ப்புகளுடனும், நற்பாசைகளுடனும் இருந்தால் மட்டும் போதாது. அவர் செயல்பட வேண்டும்; நற்செயல்களில் முனைப்புடன் ஈடுபட வேண்டும். சும்மா இருந்து விட்டு, இம்மையிலோ மறுமையிலோ நற்பலன்களை எதிர்பார்க்கக் கூடாது.

‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்பது பழமொழி. இது விடாமுயற்சியின் அவசியத்தை உணர்த்துகிறது. விடாமுயற்சி யுடன் செயல்படுபவர்கள் ஒருபோதும் தாழ்வு அடையவோ அல்லது தோல்வியைச் சந்திக்கவோ மாட்டார்கள் என்பதே இந்தப் பழமொழியின் பொருள்.

இந்தப் பழமொழியை மேற்குறிப்பிட்ட திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் பார்க் கும்போது, ஓர் இறை விசுவாசி நற்பணிகளில் முனைப்புடனும் ஊக்கத்துடனும் ஈடுபட்டு, நல்ல இலக்குகளை அடைய உழைக்கும் போது அவர் இவ்வுலகில் மட்டுமல்ல; நிலையான மறுமையிலும் தோல்வி காண மாட்டார்.



# ஒரு நிமிடம் கூட..!

மேலும், இவர்கள் உம்மிடம் 'நீங்கள் உண்மையாளராயின் அந்த (மறுமையைப் பற்றிய) வாக்குறுதி எப்பொழுது நிறைவேறும்' என்று கேட்கின்றார்கள்.[48] நீர் கூறும்: 'உங்களுக்காக எத்தகைய ஒரு நாள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது எனில், அதன் வருகையை ஒரு நிமிடம் பிற்படுத்தவும் உங்களால் முடியாது; ஒரு நிமிடம் முற்படுத்தவும் முடியாது.'[49]

இந்நிராகரிப்பாளர்கள் (உம்மிடம்) கூறுகின்றார்கள்: 'நாங்கள் ஒருபோதும் இந்தக் குர்ஆனையும் நம்ப மாட்டோம்; இதற்கு முன்பு வந்திருந்த எந்த வேதத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.'[50] அந்தோ! கொடுமை புரியும் இவர்கள் தம்முடைய இறைவனின் திருமுன் நிறுத்தப்படும்போது இவர்களின் நிலையை நீர் பார்க்க வேண்டுமே! (அவ்வேளை) இவர்கள் ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்திக் கொண்டிருப்பார்கள். (உலகில்) தங்களைப் பெரியவர்களாய்க் கருதிக் கொண்டிருந்தவர்களை நோக்கி ஒடுக்கப்பட்டிருந்தவர்கள் கூறுவார்கள்: 'நீங்கள் இல்லாதிருந்தால் நாங்கள் இறைநம்பிக்கையாளர்களாய் இருந்திருப்போம்.'[51]

தங்களைப் பெரியவர்களாய்க் காட்டிக் கொண்டிருந்தவர்கள் இந்த ஒடுக்கப்பட்ட மக்களை நோக்கி பதில் சொல்வார்கள்: 'உங்களிடம் நேர் வழி வந்ததன் பின்னர் நாங்களா அதனை விட்டு உங்களைத் தடுத்தோம்? இல்லை! மாறாக, நீங்களே குற்றவாளிகளாயிருந்தீர்கள்.'[52]

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 29-33**

**48.** எந்த நேரத்தைக் குறித்து 'நம்முடைய அதிபதி நம்மை ஒன்று கூட்டுவான். பிறகு நம்மிடையே சரியான தீர்ப்பு வழங்குவான்' என்று நீங்கள் சொன்னீர்களோ, அந்த நேரம் எப்போதுதான் வரும்? நீண்டகாலமாக உமக்கும் எங்களுக்கும் இடையில் இந்த விவகாரம் நடந்து வருகின்றது. நாங்கள் உம்மை மீண்டும் மீண்டும் ஏற்க மறுத்துக் கொண்டிருக்கின்றோம். வெளிப்படையாக உமக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றோம். இந்த நிலையில் இந்த விவகாரம் ஏன் தீர்த்து வைக்கப்படுவதில்லை?

**49.** வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் இந்தப் பதிலுக்கு, 'ஏதேனு மோர் வேலைக்கான நேரத்தை நீங்கள் நிர்ணயித்துவிட அந்தக் குறிப்பிட்ட நேரத் திலேயே அந்த வேலையைச் செய்து முடித் தாக வேண்டிய கடமைப்பட்டவன் என்கிற அளவுக்கு வல்லமையும் மாண்பும் நிறைந்த

*28 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# பிறருக்கு உபதேசித்துத் தன்னை மறக்கலாமா?

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மறுமை நாளில் ஒரு மனிதர் கொண்டு வரப்படுவார். பிறகு அந்த மனிதர் நரகத்தில் வீசப்பட்டுவிடுவார். அப்போது அந்த நெருப்பில் அவருடைய குடல்கள் வெளி வந்து சரிந்து நிற்கும்.**

**கழுதை செக்கினைச் சுற்றிச் செல்வதைப் போன்று அவர் அவற்றைச் சுமந்து கொண்டு திரிவார். நரகவாசிகள் அவரைச் சுற்றிலும் திரண்டுவிடுவார்கள். அவரிடம் கேட்பார்கள்:**

**'இன்ன மனிதரே! என்ன உம்முடைய நிலைமை இப்படி ஆகிவிட்டது?**

**நல்லறங்களைச் செய்யுமாறு எங்களுக்கு நீர் அறிவுரை கூறிக் கொண்டிருக்கவில்லையா? தீயசெயல்களிலிருந்து முற்றாக விலகியிருக்குமாறு எங்களை நீர் அறிவுறுத்திக் கொண்டிருக்கவில்லையா?'**

**அவர் சொல்வார்: 'நல்லறங்களிலும் நன்மைகளிலும் ஈடுபடுமாறு நான் உங்களுக்கெல்லாம் அறிவுரை கூறி வந்தேன். ஆனால் நானே அதன்படிச் செயல்படவில்லை. தீய செயல்களில் ஈடுபடுவதிலிருந்து உங்களையெல்லாம் நான் தடுத்து வந்தேன். ஆனால் நானே அவற்றில் திளைத்துக் கொண்டிருந்தேன்.'**

அறிவிப்பாளர் : உஸாமா(ரலி)
நூல் : புகாரி

ஊருக்கு உபதேசம் செய்தவாறு இருந்துவிட்டு தம்மை மறந்து போகின்றவர்கள் எந்த அளவுக்கு மோசமான கதிக்கு ஆளாவார்கள் என்பதை இந்த நபிமொழி உணர்த்துகின்றது.

சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாகச் செயல்படுகின்றவர்கள் மறுமைநாளில் எல்லோருக்கும் முன்னால் கேவலப்படுத்தப்படுவார்கள். நரகத்தின் அதிபயங்கரமான வேதனை வேறு அவர்களுடைய பங்குக்குக் கிடைக்கும்.

மற்றவர்களைச் சிலிர்தெழச் செய்ய வேண்டும்; சத்தியப் பாதையின் பக்கம் கொண்டு செல்ல வேண்டும் என்கிற கவலையில் தண்ணீராகத் தவித்து உருகுபவர் தம்முடைய செயல்பாடுகளைச் செம்மைப்படுத்திக் கொள்வதில் எவ்வித அக்கறையும் இல்லாதவராய், அலட்சியத்திலும் மறதியிலும் மூழ்கிக் கிடக்கின்றார் எனில், அவருடைய அந்த நடத்தையும் வழிமுறையும் முட்டாள்தனமான நடத்தையே தவிர வேறு எதுவும் இல்லை.

இவ்வாறு ஊருக்கு உபதேசம் செய்தவாறு தம்மைத் திருத்திக் கொள்வதில் அக்கறையற்று இருப்பவர்கள் இந்த நபிமொழியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மோசமான கதிக்கே உரித்தானவர்கள் ஆவர்.

நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கின்ற பணியில் இறங்குகின்ற போது முதலில் அந்த ஏவுரையின் இலக்காகத் தம்மைத்தாமே ஆக்கியவாறு தம்முடைய சொல், செயல் ஆகிய அனைத்தையும் செம்மைப்படுத்திக் கொள்வதில் ஒரே ஒரு கணம் கூட அலட்சியமாக நடந்து கொள்ளாதவர்தாம் அறிவாளி ஆவார்.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

அல்லாஹ்வின் முடிவுகள் உங்களின் விருப்பங்களுக்கு அடிபணிந்தவையாய் இருப்பதில்லை. தன்னுடைய விவகாரங்களை அவன் தன்னுடைய விருப்பு, வெறுப்பு, திட்டங்களுக்கேற்பத்தான் நடத்திக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வின் இந்தத் திட்டத்தில் இந்த உலகத்தில் செயலாற்றுவதற்கான வாய்ப்பு மனித குலத்துக்கு எதுவரை கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்? எத்தனையெத்தனை மனிதர்களையும் எத்தனையெத்தனை சமூகங்களையும் எவ்வாறெல்லாம் சோதனைக்குள்ளாக்க வேண்டும்? இந்தப் பதிவேட்டை இழுத்து மூடுவதற்கும், முந்தைய காலங்களிலும் பிந்தைய காலங்களிலும் வந்தவர்கள் அனைவரையும் விசாரணைக்காக ஒன்று திரட்டுவதற்கும் பொருத்தமான நேரம் எது ஆகியவற்றையெல்லாம் உங்களால் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அல்லாஹ்வின் திட்டத்தில் இந்தப் பணிகளுக்கு எந்த நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தக் குறிப்பிட்ட நேரத்தில்தான் இவை அனைத்தும் நடத்தி முடிக்கப்படும்.

உங்களுடைய கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அந்த நேரம் ஒரே ஒரு நொடி கூட முற்படுத்தவும் மாட்டாது; ஒரே ஒரு நொடி கூட பிற்படுத்தப்படவும் மாட்டாது' என்று பொருள்.

**50.** எந்தவொரு வான்மறையையும் ஏற்றுக் கொள்ளாத அரபு இறை மறுப்பாளர்கள் தாம் இங்கு குறிப்பிடப்படுகின்றார்கள்.

**51.** இன்று உலகில் தம்முடைய தலைவர்கள், நாட்டாண்மைகள், பீர்கள், ஆட்சியாளர்கள், அரசியல் ஆளுமைகள் போன்றவர்களின் பின்னால் கண்களை மூடிக் கொண்டு செல்கின்ற, மேலும் அவர்களுக்கு எதிராக எந்தவொரு போதகரின் அறிவுரையையும் காது கொடுத்துக் கேட்பதற்கும் ஆயத்தமாகாத பொதுமக்கள். இதே பொதுமக்கள் பேருண்மை எதுவாக இருந்தது என்பதையும் தங்களின் தலைவர்கள் தங்களுக்குச் சொல்லி வந்ததன் உண்மை நிலையையும் கண்கூடாகப் பார்க்கின்ற போது, மேலும் தங்களின் அந்த வழிகாட்டிகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியதன் விளைவாக தாம் எத்தகைய கதிக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பது இவர்களுக்குத் தெரிய வருகின்றபோது, இவர்கள் அந்தத் தலைவர்களின் பின்னால் பாய்வார்கள்; ஓங்காரக் குரலிட்டு, 'கேடுகெட்டவர்களே! எங்களை வழிகெடுத்துவிட்டீர்களே! எங்களை நேரிய வழியில் செல்லவிடாமல் தடுத்து விட்டீர்களே! நீங்கள்தாம் எங்களின் அத்துணை அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் முழுமுதல் காரணம். நீங்கள் எங்களை வழிகெடுத்திராவிட்டால் நாங்கள் அல்லாஹ்வின் தூதர்களின் பேச்சை ஏற்றுக் கொண்டிருந்திருப்போம்' என்று குமுறுவார்கள்.

**52.** 'உங்களைப் போன்ற கோடிக்கணக்கான மனிதர்களைக் கட்டாயப்படுத்தி எங்களைப் பின்பற்றி நடக்கச் செய்கின்ற அளவிலான சக்தியோ வலிமையோ சொற்பமான எண்ணிக்கையிலான எங்களுக்கு எங்கே இருந்தது? இறைத்தூதர்களின் தூதுச் செய்தியின் மீது நம்பிக்கை கொள்வதுதான் உங்களின் விருப்பமாக இருந்திருக்குமேயானால் எங்களின் அதிகார பீடங்களையும் நாட்டாண்மையையும் அரசாங்கத்தையும் கவிழ்த்து விட்டிருக்க வேண்டியதுதானே? எங்களின் இராணுவமே உங்களைப் போன்றவர்களைக் கொண்டதுதானே!

எங்களின் ஆட்சி, அதிகாரம், வலிமை, செல்வாக்கு எல்லாவற்றுக்கும் மூல ஊற்று உங்களின் கைகளில் அல்லவா இருந்தது? நீங்கள் காணிக்கைகளையும் வரிகளையும் அள்ளி அள்ளித் தந்திராவிட்டால் நாங்கள் எதுவுமே இல்லாத ஏதிலிகளாகத்தானே இருந்திருப்போம்? நீங்கள் எங்களின் கைகளைப் பற்றிப் பிடித்து எங்களின் முரீதுகளாக, சீடர்களாக ஆகியிராவிட்டால் பீர்கள் - குருக்கள் என்கிற எங்களின் ஆதிக்கம் ஒரே ஒரு நாள் கூட நிலைத்திருக்குமா, என்ன? நீங்கள் எங்களின் பெயரைச் சொல்லிச்

சொல்லி வாழ்க முழக்கம் போட்டிராவிட்டால் எங்களை யார்தான் மதித்திருப்பார்கள்? கேட்பதற்கு எவருமே இல்லாமால் நாங்கள் காணாமல் போய் இருப்போம், அல்லவா? நீங்கள் எங்களுடைய போர்ப்படை வீரர்களாக மாறி எங்களுக்காக உலகம் முழுவதும் உயிரைக் கொடுத்து போரிடுவதற்கு முன் வந்திராவிட்டால் ஒரே ஒரு ஒற்றை மனிதன் மீதும் எங்களின் ஆதிக்கம் நிலைபெற்றிருக்காதே! இறைத்தூதர்கள் உங்களுக்கு முன்னால் நேர்வழிகாட்டுதல்களை எடுத்துரைத்த போது அவர்களின் பேச்சைக் கேட்பதற்கும், அவர்கள் காண்பித்த வழியில் அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கும் உங்களுக்கு விருப்பமே இருக்கவில்லை என்பதுதான் உண்மை என்பதை இன்று நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றீர்கள்? நீங்கள் உங்களின் ஆசைகளுக்கும் உள்நோக்கங்களுக்கும் அற்ப ஆதாயங்களுக்கும் அடிமையாகிக் கிடந்தீர்கள்.

மேலும் உங்களின் மன இச்சையின் இந்தத் தேவை இறைத்தூதர்கள் காண்பித்த இறையச்சப் பாதையில் செல்வதால் நிறைவேறுவதற்கான சாத்தியமே இருக்கவில்லை. அதற்குப் பதிலாக அது எங்களிடம் தான் நிறைவேறி வந்தது. ஹலால் ஹராம் ஆகிய எந்த விதமான கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டவராக விலகிச் சென்று எந்த உலகச் சொகுசுகளையும் உல்லாசங்களையும் அடைந்துவிட நீங்கள் மோகம் கொண்டு அலைந்தீர்களோ அவையனைத்தையும் அள்ளிக்கொண்டு சுகிக்கத்தான் நீங்கள் எங்களிடம் வந்தீர்கள்.

சில சில்லறைகளைக் காணிக்கைகளாய் வாங்கிக் கொண்டு உங்களுக்கு அனைத்து விதமான பாவச் செயல்களில் ஈடுபடுவதற்கான தடையில்லா அனுமதியைத் தருவதற்கும் உங்களுடைய பாவங்கள் அனைத்தும் இறைவனிடம் மன்னிக்கப் படுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமாகிவிடுகின்ற பீர்களையும் குருமார்களையும்தாம் நீங்கள் தேடிக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் செய்து கொண்டிருந்த இணைவைப்புத்தனமான செயல்கள் ஒவ்வொன்றையும், பித்அத்தான அத்துணை செயல்பாடுகளையும், உங்களுடைய மன இச்சையைத் தணித்துக் கொள்வதற்காக நீங்கள் அரங்கேற்றிக் கொண்டிருந்த அத்துணை பாவங்களையும் முழுக்க முழுக்க சத்தியமானவைதாம் என்று நிலைநிறுத்தி உங்களின் இதயங்களை மகிழ்ச்சிப் பூக்களால் நிறைத்து விட்டு தங்களின் காரியங்களைச் செய்து முடித்துக் கொள்கின்ற பண்டிதர்களும் மௌலவிமார்களும் உங்களுக்கு விருப்பமானவர்களாக இருந்தார்கள்.

இறைவனின் மார்க்கத்தைச் சீர்குலைத்தும் உங்களுடைய விருப்பங்களுக்கேற்ப புதிய மார்க்கத்தை உருவாக்கித் தருகின்ற மோசடிப் பேர்வழிகள்தாம் உங்களுக்குத் தேவையாக இருந்தார்கள். உங்களின் மறுமை நலன்கள் சிறக்குமா, சிதைக்குமா என்பதைக் குறித்து சற்றும் பொருட்படுத்தாமல் உங்களின் உலக வளங்களையும் சொகுசுகளையும் எப்படியாவது ஆக்கிக் கொடுத்துவிடுகின்ற தலைவர்கள்தாம் உங்களுக்கு விருப்பமானவர்களாய் இருந்தார்கள்.

தாமும் ஒழுக்கங்கெட்டவர்களாக நேர்மையற்றவர்களாக இருந்தவாறு, நீங்கள் செய்கின்ற பாவச் செயல்கள், ஒழுக்கக் கேடுகள் அனைத்துக்கும் உங்களை அரவணைத்து உங்களை ஆதரிக்கின்ற தலைவர்கள்தாம் உங்களுக்கு விருப்பமானவர்களாக இருந்தார்கள். இவ்வாறாக உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பேரம் சரிசமமானதாக அமைந்துவிட்டது. இப்போது திடீரென்று உங்களை நீங்களே பரிசுத்தமானவர்களாகச் சித்திரித்துக் கொண்டும் உங்களை வலுக்கட்டாயமாக வழிகெடுத்தவர்களாக எங்கள் மீது பழிபோட்டும் பாவனை செய்துகொண்டிருக்கின்றீர்களே, என்ன கோலம் இது?' என்று அவர்கள் சொல்வார்கள்.

(தொடரும்)

● அபூஹம்னா BE

**‘உங்களில் எவரேனும் ஒரு தீமையைக் கண்டால் அவர் அதைத் தனது கையினால் தடுக்கட்டும்; அதற்கு முடியாவிட்டால் தனது நாவினால் (தடுக்கட்டும்); அதற்கும் முடியாவிட்டால் தனது உள்ளத்தினால் (வெறுக்கட்டும்). இது ஈமானின் (இறை நம்பிக்கையின்) பலவீனமான நிலையாகும்.’ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம் (78), நஸாயீ - 5008)**

தீமையை மூன்று வழிமுறைகள் வாயிலாகத் தடுக்க வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இதை சமூக வலைதளங்களில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### 1. கைகளால் தடுத்தல் (அதிகாரம், தொழில்நுட்ப நடவடிக்கை)

சமூக வலைதளங்களில் ‘கை’ என்பது நமக்கிருக்கும் தொழில்நுட்ப அதிகாரத்தைக் குறிக்கும்.

**Report Flag** ஆபாசம், வன்முறை அல்லது இஸ்லாத்திற்கு எதிரான தவறான தகவல்கள் பரப்பப்படும்போது, அந்தப் பதிவை Report செய்து அதைத் தளத்தி லிருந்து நீக்க முயற்சிப்பது.

**Admin Power** நீங்கள் ஒரு WhatsApp குழு அல்லது Facebook பக்கத்தின் அட்மினாக இருந்தால், அங்கு பகிரப்படும் தீய பதிவுகளை நீக்குவதும், சம்பந்தப்பட்டவரை எச்சரிப்பதும் ‘கைகளால் தடுத்தல்’ என்பதில் அடங்கும்.

**Unfollow / Block** தீமையைப் பரப்பும் பக்கங்களை Unfollow செய்வது அல்லது Block செய்வது உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள செயலாகும்.

### 2. நாவினால் தடுத்தல் (கருத்து, விழிப்புணர்வு)

சமூக வலைதளங்களில் ‘நாக்கு’ என்பது உங்கள் பதிவுகள் (Posts), கருத்துகளை (Comments) குறிக்கும்.

**மறுப்புத் தெரிவித்தல்** ஒரு தவறான தகவல் பகிரப்படும்போது, அதற்கு நாகரிகமான முறையில் ஆதாரத்துடன் மறுப்புத் தெரிவித்து கமெண்ட் செய்வது.

**விழிப்புணர்வுப் பதிவுகள்** சமூகச் சீர்கேடுகள் நடக்கும்போது, அவற்றின்

# தீமையைத் தடுக்கும் வழிமுறை

பாதிப்புகளை விளக்கி வீடியோக்களாகவோ அல்லது கட்டுரைகளாகவோ பதிவிடுவது.

**நல்லவற்றை ஏவுதல்** தீமையை விமர்சிப்பதோடு நின்றுவிடாமல், அதற்கு மாற்றான நன்மைகளை நோக்கி மக்களை அழைப்பது.

### 3. உள்ளத்தால் வெறுத்தல் (தனிமனித ஒழுக்கம்)

உங்களால் ஒரு தீமையைத் தொழில்நுட்ப ரீதியாகத் தடுக்க முடியவில்லை அல்லது நாவால் சொன்னால் பெரிய குழப்பம் வரும் என்ற சூழல் இருந்தால், குறைந்தபட்சம் அதை உள்ளத்தால் வெறுக்க வேண்டும்.

**ஈடுபடாமல் இருத்தல்** ஒரு தீய பதிவு வைரலாகிக் கொண்டிருக்கும்போது, அதற்கு Like செய்யாமலும், அதை மற்றவர்களுக்குப் பகிராமலும் (Share செய்யாமல்) இருப்பது.

**விலகி இருத்தல்** தேவையற்ற விவாதங்கள், பிறரைத் தரக்குறைவாக விமர்சிக்கும் பதிவுகள் ஆகியவற்றைக் காணும்போது, இது இறைவனுக்கு உகந்தது அல்ல என்று உள்ளத்தால் வெறுத்து அந்தப் பக்கத்தை விட்டு வெளியேறுவது.

சுருக்கமாக தீமையைத் தடுப்பதாக எண்ணி, சமூக வலைதளங்களில் பிறரை ஏசுவதோ, ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதோ கூடாது. நபிகளார்(ஸல்) அவர்கள் காட்டிய மென்மையையும், ஆதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டே நமது டிஜிட்டல் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

தீமையைத் தடுக்கும் விஷயத்தில் நபி (ஸல்) அவர்கள் அழகான வழிகளைக் காட்டியிருக்கிறார்கள். அவற்றை அறிந்து கொள்வது அவசியமாகும்.

## நபிகளார் தீமையைத் தடுத்த விதம்

### அறியாமல் செய்தவருக்கு அறிவுரை கூறுதல்

அபூ ஹுரைரா(ரலி), அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒரு முறை நாங்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலில் இருந்தோம். அப்போது கிராமவாசி ஒருவர் வந்து பள்ளிவாசலுக்குள் சிறுநீர் கழித்தார். உடனே அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுடைய தோழர்கள் ‘நிறுத்து! நிறுத்து!’ என்று கூறினர். (இன்னும் சிலர்) அவரைத் தாக்குவதற்காக அவரை நோக்கி குதித்தெழுந்தனர்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், ‘(அவர் சிறுநீர் கழிப்பதை) இடைமறிக்காதீர்கள். அவரை விட்டுவிடுங்கள்’ என்று கூறினார்கள். எனவே, நபித்தோழர்கள் அவரை விட்டுவிட்டனர். அவர் சிறுநீர் கழித்து முடித்தார்.

அப்போது மக்களிடம் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ‘அந்த மனிதர் கழித்த சிறுநீர் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடுங்கள். (எப்போதும்) நளினமாக நடந்து கொள்ளவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். கடினமாக நடந்து கொள்ள அனுப்பப்படவில்லை’ என்று கூறினார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் அந்த மனிதரை அழைத்து, ‘இந்தப் பள்ளிவாசல்கள் சிறுநீர் கழித்தல், அசுத்தம் செய்தல் ஆகியவற்றுக்குரிய இடமல்ல. இது இறைவனை நினைவு கூர்ந்து போற்றுவதற்கும் தொழுவதற்கும் குர்ஆனை ஓதுவதற்கும் உரியதாகும்’ என்றோ, அல்லது இந்தக் கருத்திலமைந்த வேறு வார்த்தைகளையோ அவரிடம் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் : 480. புகாரி 6128)

இந்த ஹதீஸ் தற்கால சமூக ஊடகச் சூழலுக்கு மிகவும் தேவையான உளவியல், அணுகுமுறைப் பாடங்களை வழங்குகின்றன.

### 1. திருத்துதல் என்பது தண்டித்தல் அல்ல

பள்ளிவாசலில் சிறுநீர் கழித்த கிராமவாசி தவறு செய்கிறார் என்று தெரிந்தும், அவரை பாதியிலேயே தடுக்க வேண்டாம் என்று நபிகள் நாயகம்(ஸல்) கூறுகிறார்கள்.

யாராவது ஒருவர் அறியாமையினால் தவறான கருத்தைப் பதிவிடும்போது, உடனே அனைவரும் சேர்ந்து அவரை 'ட்ரோல்' (Troll) செய்வதும், வசைபாடுவதும் அவரைத் திருத்தாது. மாறாக அவர் இன்னும் பிடிவாதமாக மாறவே வழிவகுக்கும்.

### 2. சூழலைக் கையாளும் நளினம் (Gentleness)

'நான் நளினமாக நடக்கவே அனுப்பப் பட்டுள்ளேன், கடினமாக நடக்க அல்ல' என்ற வரிகள் சமூக ஊடகப் பயனர்களுக்கு மிக முக்கியமான பாடம்.

ஒரு கருத்தை மறுக்கும் போது கண்ணியமான மொழியைப் பயன்படுத்த வேண்டும். கடுமையான சொற்கள் ஒரு கருத்தைச் சென்றடையாது, மாறாக வெறுப்பையே வளர்க்கும். விசைப்பலகை போர்வீரர்களாக (Keyboard Warriors) இருப்பதை விட, நளினமான வழிகாட்டிகளாக இருப்பது அவசியம்.

### 3. தவறை நீக்குவதில் கவனம் (Solution Oriented)

நபிகளார் அந்த மனிதரை அடிக்கச் சொல்லவில்லை. மாறாக அங்கு ஒரு வாளித் தண்ணீரை ஊற்றுங்கள் என்று தீர்வை நோக்கி நகர்கிறார்கள்.

ஒரு தவறைச் சுட்டிக்காட்டுவதை விட, அந்தத் தவறு ஏற்படுத்திய பாதிப்பை எப்படிச் சரி செய்வது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஒருவரது தனிப்பட்ட குணத்தைச் சிதைக்காமல், அவர் செய்த தவறை மட்டும் சரி செய்வதே அறிவுடைமை.

> **யாராவது ஒருவர் அறியாமையினால் தவறான கருத்தைப் பதிவிடும்போது, உடனே அனைவரும் சேர்ந்து அவரை 'ட்ரோல்' (Troll) செய்வதும், வசைபாடுவதும் அவரைத் திருத்தாது. மாறாக அவர் இன்னும் பிடிவாதமாக மாறவே வழிவகுக்கும்.**

### 4. அறியாமைக்குக் கல்வி புகட்டுதல்

நபிகளார் சிறுநீர் கழித்தவரை அழைத்து, 'இது அதற்கான இடமல்ல, இது இறைவனைத் துதிப்பதற்கான இடம்' என்று மிக மென்மையாக அந்த இடத்தின் புனிதத்தை விளக்குகிறார்கள்.

பல நேரங்களில் மக்கள் இணையத்தில் தவறான தகவல்களை (Misinformation) அறியாமையினால் பகிர்கிறார்கள். அவர்களைக் கேலி செய்வதற்குப் பதில், சரியான ஆதாரங்களை மென்மையாகத் தெளிவுபடுத்துவதே சமூக மாற்றத்தை ஏற்படுத்தும்.

### *உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல்*

அபூ உமாமா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'குறைஷி குலத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! விபச்சாரம் செய்ய எனக்கு அனுமதி கொடுங்கள்' என்று கேட்டார். உடனே மக்கள் அவரை நோக்கிச் சத்தமிட்டு, 'சீச்சீ.. நிறுத்து!' என்று அதட்டினார்கள்.

நபி(ஸல்) அவர்கள், 'அவரை நெருங்கி வரச் சொல்லுங்கள்' என்றார்கள். அவர் நபி(ஸல்) அவர்களுக்கு மிக அருகில் வந்து அமர்ந்தார். 'உனது தாய்க்கு இச்செயல் நடப்பதை நீ விரும்புவாயா? என்று நபிகளார் கேட்க அந்த இளைஞர் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! மாட்டேன் அல்லாஹ்வின் தூதரே!' என்று பதிலளித்தார். 'அவ்வாறே மக்களும் தங்கள் தாய்க்கு அதை விரும்பமாட்டார்கள்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தொடர்ந்து, 'உனது மகளுக்கு விரும்புவாயா? என்று நபிகளார் கேட்க அந்த இளைஞர்: 'மாட்டேன் அல்லாஹ்வின் தூதரே!' என்றார். 'அவ்வாறே மக்களும் தங்கள் மகள்களுக்கு அதை விரும்பமாட்டார்கள்'

இவ்வாறே அந்த இளைஞரின் சகோதரி, தந்தையின் சகோதரி (அத்தை), தாயின் சகோதரி (சின்னம்மா, பெரியம்மா) ஆகியோரைக் குறிப்பிட்டு நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஒவ்வொன்றிற்கும் அந்த இளைஞர் 'மாட்டேன்' என்றே பதிலளித்தார்.

பிறகு நபி(ஸல்) அவர்கள் அந்த இளைஞரின் மீது கையை வைத்து, 'இறைவா! இவரது பாவத்தை மன்னிப்பாயாக! இவரது இதயத்தைத் தூய்மைப்படுத்துவாயாக! இவரது கற்பைப் பாதுகாப்பாயாக!' என்று பிரார்த்தனை செய்தார்கள். இதற்குப் பிறகு அந்த இளைஞர் (பாவமான) எதையும் திரும்பிப் பார்க்கவே இல்லை. (ஆதாரம்: அஹ்மத் 22211)

### 1. *நிதானமும் மென்மையும்* (Calmness and Gentleness)

அந்த இளைஞரின் கோரிக்கையைக் கேட்டதும் தோழர்கள் கோபமடைந்து அவரை அதட்டினார்கள். ஆனால், நபிகளார் (ஸல்) அவர்கள் பதற்றமடையவில்லை.

ஒருவர் எவ்வளவு பெரிய தவறைச் செய்ய நினைத்தாலும் அல்லது பேசினாலும், அவரிடம் கோபப்படாமல் மென்மையாக அணுகுவதுதான் அவரைத் திருத்துவதற்கான முதல் படி.

சமூக ஊடகத்தில் ஒருவர் தவறான பாதையில் செல்கிறார் என்றால், அவரை Comments பகுதியில் போட்டுத் தாக்குவது அவரை இன்னும் மோசமாக்கும். நபிகளார் அவரை அருகில் அழைத்தது போல நாம் Direct Message (DM) மூலம் தனிப்பட்ட முறையில் அன்பாகப் பேச வேண்டும்.

### 2. *அருகில் அமரவைத்தல்* (Establishing Connection)

நபிகளார் அவரைத் தள்ளி நின்று பேசச் சொல்லாமல், 'அருகில் வா' என்று அழைத்து அமர வைத்தார்கள்.

ஒருவருக்கு அறிவுரை சொல்லும்போது அவருக்கும் நமக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து, அவர் மீது நமக்கு அக்கறை இருக்கிறது என்பதை உணரச் செய்ய வேண்டும். இது அவரை உளவியல் ரீதியாக நம் பேச்சைக் கேட்கத் தயார் செய்யும்.

சமூக ஊடகத்தில் தவறிழைத்த ஒருவரிடம் பேசும்போது தனிப்பட்ட முறையில் அவரிடம் உரையாட வேண்டும். அவர்களை அன்பான வார்த்தைகள் கொண்டு அழைக்க வேண்டும்.

**இத்தகைய உணர்வு ஒருவனுக்கு வந்துவிட்டால், அவன் இணையதளத்தில் பிற பெண்களின் புகைப்படங்களுக்குத் தவறான கமெண்ட் போடுவதையோ அல்லது ஆபாசத்தைப் பார்ப்பதையோ நிறுத்திவிடுவான்.**

### 3. *தர்க்க ரீதியான அணுகுமுறை* (Logical Reasoning)

விபச்சாரம் செய்ய அனுமதி கேட்டவரிடத்தில் நபிகளார்(ஸல்) அவர்கள் 'இது ஹராம் (தடுக்கப்பட்டது), நரகம் செல்வாய்' என்று கூறவில்லை. மாறாக மனித உணர்வுகளைத் தூண்டி, அது தவறு என்பதை உணர வைத்தார்கள்.

ஒரு தீமையைத் தடுக்கும்போது அந்தத் தீமையால் மற்றவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை (Empathy) உணர வைப்பது மிகச் சிறந்த போதனையாகும்.

எனவே சமூக வலைதளங்களில் யாராவது ஒரு தவறான கருத்தைப் பதிவிட்டால், உடனே 'நீ காஃபிர்', 'நீ நரகவாசி' என்று முத்திரை குத்தாமல், அவர்களைச் சிந்திக்க வைக்கும் கேள்விகளை எழுப்ப வேண்டும்.

### 4. *உறவுகளின் மேன்மை*

'உன் தாய்க்கு இதை நீ விரும்புவாயா?', 'உன் மகளுக்கு விரும்புவாயா?' என்ற கேள்விகள் மூலம், விபச்சாரம் என்பது ஏதோ ஒரு பெண்ணுடன் செய்வது மட்டுமல்ல, அது ஒருவருடைய தாய், மகள் அல்லது சகோதரியின் வாழ்க்கையைச் சீரழிப்பது என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

நாம் செய்ய நினைக்கும் ஒரு செயல் மற்றவர்களின் குடும்பத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்தால் அந்தத் தீமையைச் செய்ய மனம் வராது.

இத்தகைய உணர்வு ஒருவனுக்கு வந்து

விட்டால், அவன் இணையதளத்தில் பிற பெண்களின் புகைப்படங்களுக்குத் தவறான கமெண்ட் போடுவதையோ அல்லது ஆபாசத்தைப் பார்ப்பதையோ நிறுத்திவிடுவான்.

### *5. தொடுதல், பிரார்த்தனை*
(Physical Comfort and Dua)

அறிவுரை கூறி முடித்த பிறகு, நபிகளார் (ஸல்) அவர்கள் அந்த இளைஞரின் நெஞ்சில் கை வைத்து அவருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

ஒருவரைத் திருத்துவதில் பேச்சால் சொல்லும் அறிவுரை 50% என்றால், அவர் மீது காட்டும் அன்பும் (அரவணைப்பு) அவருக்காகச் செய்யும் பிரார்த்தனையுமே மீதி 50% வேலையைச் செய்கிறது.

இன்று நாம் ஆன்லைனில் ஒருவரைத் திருத்த முயலும்போது வாதங்களில் ஜெயிக்க நினைக்கிறோமே தவிர, அவருக்காக ஒரு நிமிடம் மனதார துஆ செய்வதில்லை.

எனவே சமூக வலைதளங்களில் ஒருவருடன் விவாதித்து முடித்த பிறகு அல்லது ஒரு தீய பதிவைக் கண்ட பிறகு, 'யா அல்லாஹ்! இவருக்கு நேர்வழி காட்டு' என்று நமக்கும் அவருக்கும் இடையில் ரகசியமாகச் செய்யும் துஆ, ஆயிரக்கணக்கான கமெண்ட்களை விட அதிகச் சக்தி வாய்ந்தது.

### *6. முழுமையான மாற்றம்*

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, அந்த இளைஞர் கூறும்போது: 'நான் அந்த இடத்திலிருந்து எழுந்திருக்கும்போது, விபச்சாரம் என்பது எனக்கு உலகிலேயே ஆக வெறுப்பான ஒரு செயலாக மாறிவிட்டது' என்றார்.

இதயப்பூர்வமாகச் சொல்லப்படும் அறிவுரை ஒரு மனிதனின் குணத்தையே அடியோடு மாற்றிவிடும். தீமையைத் தடுப்பதும் ஒரு கலையாகும். அதை நிதானத்தோடும் அறிவுப்பூர்வமாகவும் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் அது பெரும் தீமைகளை ஏற்படுத்தும்.


www.samarasam.net
சமரசம்
மாதம் இருமுறை இதழ் ₹25

46 ஆண்டுகளைக் கடந்து
இதழியல் பயணத்தில்
முத்திரை பதித்த முன்னோடி இதழ்

ஆண்டுச் சந்தா
ரூ. 550
மட்டுமே



விருப்பு வெறுப்பற்ற
நேர்கொண்ட பார்வை

தேன் தமிழில் தீன் மணக்கும்
திங்களிருமுறை இதழ்



எல்லாருக்குமான இதழ்
எல்லாம் நிறைந்த இதழ்

வங்கி விவரம் :
Creative Communication Chennai
A/c No. 30705346015
State Bank of India, Jamalia Branch,
IFS Code - SBIN0014623
Gpay : 9566153142

தொடர்புக்கு :
சமரசம்
138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை 12.
• 044-2662 0091 • 95661 53142
• samarasam12@gmail.com
• www.samarasam.net

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

TRUST WORTHY

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**

B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**

சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

• அ.நஜ்முத்தீன்

**காட்டுக் குதிரையை வீட்டுக்குள் வளர்கின்ற ஆட்டுக் குட்டியாக மாற்றி விடுவேன் என கனவு காண்கின்றார்கள். அவ்வாறு நடப்பது மிக மிக அரிது. ஆனாலும் மாற்றி விடலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?**

# சதுரங்க விளையாட்டு!

உலகில் ஒரே ஒரு பூமி மட்டுமே உள்ளது. இன்னொரு பூமியைத் தேடினாலும் கிடைக்காது. ஆயினும் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்றார்கள். ஒவ்வொரு மனிதரும் வித்தியாசமானவர்களாகவே உள்ளனர்.

எப்படி ஒவ்வொருவருக்கும் விரல் ரேகையும், விழியும் வித்தியாசப்படுகிறதோ அதுபோல வித்தியாசமான குணங்களைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் வேறு வேறு சூழலில், கலாச்சாரப் பின்னணியில் நெறிமுறைகளும், குணங்களும், சிந்தனையும் வேறுபட்டு இருந்தும் திருமணம் என்ற பந்தத்தின் மூலம் ஆணும் பெண்ணும் இணைக்கப்படுகிறார்கள்.

அதாவது பூனைக்கு எலியைத் தின்பது பாவமான செயல் அல்ல. அதன் குணம் அவ்வாறு. எலிக்கு அடுப்பங்கரையில் நுழைந்து உணவைத் திருடித் தின்பது அதன் பார்வையில் தவறு இல்லை. இது எலியின் குணம். இவ்வாறு வேறு வேறு குணம் கொண்டவர்களை மாற்றி விடலாம் என கணவனும் மனைவியும் நினைக்கலாம். ஆனால் நிஜம் என்ன தெரியுமா? அவர்கள் அவர்களாகத்தான் இருப்பார்கள்.

காட்டுக் குதிரையை வீட்டுக்குள் வளர்கின்ற ஆட்டுக் குட்டியாக மாற்றி விடுவேன் என கனவு காண்கின்றார்கள். அவ்வாறு நடப்பது மிக மிக அரிது. ஆனாலும் மாற்றி விடலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? காட்டுக் குதிரையை அதன் குணங்களுக்கு ஏற்ப ரசிக்க, பழகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது அது ஆட்டுக் குட்டியாக மாறிவிடும். எவ்வாறு என்றால் சதுரங்க விளையாட்டு போல!

சதுரங்க விளையாட்டு (செஸ்) விளையாடிய அனுபவம் பலருக்கும் இருக்கும். செஸ் விளையாட்டில் ராணிக்குத்தான் பவர் அதிகம். ராஜா(King) ஒரு கட்டம் நகர்வார், மறுபடி



பின்னுக்கு வருவார். ராஜாவைக் காப்பாற்ற வேண்டியது ராணியே(Queen) இது சதுரங்க விளையாட்டுக்கு மட்டுமே பொருந்துகிற விதி அல்ல. வாழ்க்கையில் அப்படித்தான். ராஜாவின் செயலும், குணமும் தடம் புரளாமல் காப்பாற்ற வேண்டியது மனைவியே!

கணவனையும் விட்டுக் கொடுக்காமல், குடும்பத்தையும் மேம்படுத்தி ராணியாகக் கிரீடம் சுமக்கும் அந்த லாவகம் மனைவியர்களின் கைகளில்தான் உள்ளது. விளையாட்டோ, வாழ்க்கையோ, வாழ்க்கையில் வெற்றிபெற மிகுந்த சாதுர்யமும், அதிகமான பொறுமையும் அவசியம். பொதுவாக எதார்த்த வாழ்க்கையில் தான் கவனிக்கப்பட வேண்டும். தனக்கான முக்கியத்துவம் குறையக் கூடாது என்கிற எண்ணம் மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் இருக்கின்ற இயல்பு. நிஜ வாழ்க்கையில் நம் குழந்தையிடம் கூட இதைப் பார்க்கலாம்.

தன் அம்மா - அப்பா தன்னைக் கவனிக்காமல் வேறு யாரிடமாவது பேசிக் கொண்டிருந்தாலோ அல்லது மொபைலை பார்த்துக் கொண்டிருந்தாலோ அது அந்தக் குழந்தைக்குப் பிடிக்காது. கணவன் - மனைவிக்குள்ள நிலையும் இது போலத்தான். மூன்றாம் நபருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. அப்போதுதான் உறவுகள் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருக்கும்.

நற்குணம் பாதி, தீய ஷைத்தானிய குணம் பாதி கலந்து செய்த கலவை குணம் கொண்டவர்களாகத்தான் மனிதர்கள் இருக்கின்றார்கள். அதாவது ஈகோ குணம் கொண்டவர்களாத்தான் கணவன் - மனைவி இருக்கின்றார்கள். இந்த ஈகோவின் பின்னணியில் இருப்பது ஷைத்தானே. எப்போதெல்லாம் கணவன் - மனைவிக்குள் ஈகோ தலை தூக்குகிறதோ, அப்போதெல்லாம் நற்குணம் கொண்டு பேலன்ஸ் (நடுநிலையாக) செய்யப் பழக வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை நரகம் தான்.



ஈகோ தலைதூக்கும் போதெல்லாம் மூளைக்கு வேலை கொடுங்கள். மூளைக்கு வேலை கொடுக்க முயன்றால் (சிந்தித்தால்) அணுகுமுறையை மாற்றி யோசிக்க வைக்கும். மொத்தத்தில் உறவுகள் நெருக்கமாகும். எனவேதான் இறைவன் இவ்வுலகில் எத்தனையோ பொருள்கள் இருக்கும் போது ஒருவருக்கொருவர் ஆடை என்பதாக இறைநூலில் (குர்ஆனில் 2:187) கூறியுள்ளான்.

ஆடை எப்படி மனிதனை நிர்வாணத்திலிருந்தும், வெப்பம் - குளிர் போன்ற பாதிப்புகளிலிருந்தும், மரியாதைக்குரியவனாகவும் பாதுகாக்கிறதோ அது போல கணவன் - மனைவி இருவருக்கும் உள்ள உறவை அல்லாஹ் சொல்லிக் காட்டியுள்ளான். மேலும் பல கருத்துகள் இதனுள் அடங்கியுள்ளது. இதைப் புரிந்து கொண்டால் உறவுகள் இனிக்கும். இல்லறம் நல்லறமாகும்.

# குர்ஆன் கூறும் அறிவியல் சிந்தனைகள்

**- ஐ.மஹபூப் ஜான்,** M.Sc., M.A., B.Ed., M.Phil.

**இஸ்லாமும் அறிவியலும் வேறுபட்ட இரு துருவங்கள் அல்ல. நவீன உலகில் இயற்கையின் ரகசியங்களைப் பகுத்து உணர்ந்து அதைக் கண்டறிவதும் அறிவியலே. அந்த அறிவியல் என்பது இஸ்லாம் தந்த அருட்கொடை.**

‘அவர்கள் குர்ஆனைப் பற்றிச் சிந்திப்பதில்லையா? இது அல்லாஹ்வை அன்றி வேறொருவரிடமிருந்து வந்திருந்தால் அதிகமான முரண்பாடுகளை இதில் கண்டிருப்பார்கள்’ (திருக்குர்ஆன் 4:82) என்று திருக்குர்ஆன் பல இடங்களில் சிந்திக்கச் சொல்லி அறிவையும் ஆராய்ச்சியையும் தூண்டுகிறது.

திருக்குர்ஆனின் தோற்றுவாயே, ‘அனைத்துப் புகழும் அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து, வளர்த்து, பரிபக்குவப்படுத்தும் நாயனான அல்லாஹ்வுக்கே உரியதாகும்’ என்று அறிவியல் சிந்தனையைத் தூண்டுகிறது.

இப் பூவுலகத்தைத் தவிர வேறு எந்த உலகையும் அறியாத காலத்தில் அறிவியலோ, அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு உதவும் சாதனங்களோ, அது பற்றிய அறிவோ இல்லாத 1400 ஆண்டுகளுக்கு முன்பே அகிலங்கள் (உலகங்கள்) என்று பன்மைச் சொல்லில் தொடங்கி ஆராய்ச்சியாளர்களைச் சிந்திக்கச் செய்து ‘அதிவிரைவில் நாம் இவர்களுக்கு நம்முடைய சான்றுகளை அனைத்துத் திசைகளிலும் அவர்களுக்குள்ளேயும் காண்பித்துக் கொடுப்போம். இந்தக் குர்ஆன் சத்தியமானது எனும் உண்மை இவர்களுக்குத் தெளிவாகிவிடும் வரையில்! உம் இறைவன் ஒவ்வொன்றுக்கும் சாட்சியாக இருக்கின்றான் என்பது போதுமானதாக இல்லையா?’ (திருக்குர்ஆன் 41:53) என்று சிந்திக்கத் தூண்டியது திருக்குர்ஆன்.

அதன் விளைவாக கோள்கள் பற்றிய ஆய்வு, மானுட உலகம், வானவர்களின் உலகம் (Aliens), விலங்குகளின் உலகம், தாவரங்களின் உலகம் என்று ஆய்வுகள் இன்று வரை தொடர்ந்து கொண்டே உள்ளது.

## புவித்தோற்றம்


உலகின் தோற்றத்துக்கு முன்னால் ஆக்சிஜன், ஹைட்ரஜன், கார்பன், கால்சியம், இரும்பு, சிலிக்கான் உள்ளிட்ட பல தனிமங்கள் கலந்த Nebuleas என்ற நீராவி துணுக்குகள் போன்ற பொருட்களே காணப்பட்டன. அந்த அக்னிக் கோளம் அதிக வேகத்துடன் சுழலத் தொடங்கிய போது வெடித்துத் துகள்கள் சிதறின. இந்தத் துகள்கள் பிறகு குளிரத் தொடங்கி தனித்தனி கோள்களாகப் பிரிந்து நாம் அறிந்திருக்கும் சூரிய குடும்பம் உருவானது. இவ்வாறுதான் விண்ணியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ‘நிச்சயமாக தொடக்கத்தில் வானங்களும் பூமியும் ஒன்றாக இணைந்திருந்தன. இவற்றை நாமே வெவ்வேறாகப் பிரித்து அமைத்தோம்’ (திருக்குர்ஆன் 55:33) என்று திருக்குர்ஆன் கூறுகிறது. விஞ்ஞானிகள் பெரும்பான்மையோரின் கருத்தும் இதுவே.

## விண்வெளிப்பயணம்

‘வானங்கள், பூமி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து செல்ல நீங்கள் சக்தி பெறுவீர்களாயின், (அவ்வாறே) செல்லுங்கள்’ (திருக்குர்ஆன் 55:33) என்று விண்வெளியில் பயணம் செய்யும் சிந்தனையை 1400 ஆண்டுகளுக்கு முன்பே கூறுகிறது திருக்குர்ஆன்.

## விண்ணியல்

சந்திரனுக்கு ஒளியை உண்டாக்கும் தன்மை இல்லை. அது சூரியனின் ஒளியை பிரதிபலிக்கின்றது என்கின்றனர் அறிவியல் ஆய்வாளர்கள். அதையே திருக்குர்ஆன் 25:61 ஆவது வசனத்தில் ‘பெரும் பாக்கியம் உடையவனாவான்; விண்ணில் உறுதியான மண்டலங்கள் அமைத்து அதில் ஒளிவிளக் கையும் ஒளிர்கின்ற சந்திரனையும் பிர காசிக்கச் செய்தவன்!’ என்று கூறுகிறது.




பூமி உருண்டை நிலையானது என்றும், சூரியனைப் பூமி சுற்றுகிறது என்றும் விஞ் ஞானிகள் 500 ஆண்டுகளுக்கு முன்புவரை கூறிவந்தனர். ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பூமியின் வடிவத்தை ‘தஹாஹா’ என்று தீக்கோழி முட்டையின் வடிவத்துடன் ஒப்பிட்டு பூமியின் ஓரமான இரு துருவப் பகுதிகளிலும் தட்டையாக உள்ளதை அழகாகத் திருக்குர்ஆன் வர்ணிக்கிறது.

‘மேலும், சூரியனும் (பிறிதொரு சான் றாகும்). அது தனக்குரிய இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இது பேரறிவு படைத்தவனும் வல்லமை மிக்கவனுமான இறைவனின் நிர்ணயமாகும். மேலும், சந்திரன் (இன்னொரு சான்றாகும்). அதற்கு நாம் பல்வேறு நிலைகளை ஏற்படுத்தியுள் ளோம். எதுவரையெனில், அது (அவற்றை யெல்லாம் கடந்து) உலர்ந்து வளைந்துபோன பேரீச்சங்காம்பு போல் மீண்டும் ஆகி விடுகிறது. சூரியன் சந்திரனைச் சென்றடைய முடியாது. மேலும், இரவு பகலை முந்தி விட முடியாது. ஒவ்வொன்றும் தத்தமது மண்டலங்களில் நீந்திக் கொண்டிருக்கின்றன’ (திருக்குர்ஆன் 36:38-40) ஆகிய வசனங் களில் பூமி, சந்திரன், சூரியன் யாவும் ஒரு வட்டத்தில் சுழல்கின்றன என்று தொலை நோக்கி இல்லாத காலத்திலேயே கோள்களின் சுற்று வட்டப் பாதையைப் பற்றி திருமறைக் குர்ஆன் கூறுகிறது.

## அணு

அணுவைக் கண்டுபிடித்த மனிதன் அதுவே உலகில் மிகச் சிறியது என்று கூறி வந்த நிலையில் திருக்குர்ஆனின் 34:3 ஆவது வசனம் ‘வானங்களிலும் பூமியிலும் அணு அளவு பொருள்கூட அவனைவிட்டு மறைந்திருக்கவில்லை. அணுவைவிடச் சிறியதோ, அதைவிடப் பெரியதோ அனைத் துமே ஒரு தெளிவான ஏட்டில் பதிவு செய் யப்பட்டிருக்கின்றன.’ என்று அணுவைப் பிளந்து அதைவிடச் சிறியதாக ஆக்க முடியும் என்பதை 1400 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குர்ஆன் கூறியுள்ளது.

## மலைகள்





பூமி அசையாமல் இருக்க மலைகள் பூமியில் வேர்கள் போன்று முளைகளாக உள்ளன. இந்த முளைகள் பூமியின் மேலுள்ள மேற்பரப்பில் மலைகளின் உயரத்தை விட அதிக ஆழமாக பூமியின் உள்ளே இருக்கும். இதையே திருக்குர்ஆன் ‘மேலும், பூமியில் மலைகளை (முளைகளாக) அவன் ஊன்றினான்; உங்களோடு சேர்ந்து அது சாய்ந்து விடக்கூடாது என்பதற்காக!’(திருக்குர்ஆன் 16:15) என்றும் ‘மேலும், மலைகளை முளைகளாக ஊன்றி வைக்கவில்லையா?’ (திருக்குர்ஆன் 78:7) என்றும் கூறுகிறது.

## கருவியல்

கருவில் உருவாகும் மனிதனின் படைப் பைப் பற்றிய படிநிலைகளை, அறிவியல்

உலகமே வியந்து போற்றும் மிகப்பெரிய அறிவியல் உண்மையைப் படிப்படியாக திருக் குர்ஆனின் மூன்று வசனங்கள் மருத்துவத் துறைக்கு மகத்தான செய்தியைத் தருகிறது. அவை 23ஆவது அத்தியாயத்தின் 12,13,14 வசனங்களாகும்.




படம் 19.3 முதுகெலும்பு உள்ளவற்றின் கரு வளர்ச்சி நிலைகள்

'மனிதனை நாம் களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம்' (திருக்குர்ஆன் 23:12) மண்ணில் இருந்து பெறப்படும் உணவுப் பொருட்களை உண்பதால் மனித சக்தி உருவாகிறது.

'பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் (செலுத்தப்பட்ட) விந்தாக ஆக்கி னோம்' (திருக்குர்ஆன் 23:13) 'பிறகு அந்த விந்தினை இரத்தக் கட்டியின் வடிவத்தில் அமைத்தோம். பின்னர் அந்த இரத்தக் கட்டியை சதைக்கட்டியாய் ஆக்கினோம். பிறகு, அச்சதைக்கட்டியை எலும்புகளாய் ஆக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளைச் சதையால் போர்த்தினோம். பிறகு, அதனை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச் செய்தோம். பெரும் அருட்பேறுகள் உடைய வன் ஆவான் அல்லாஹ், படைப்பாளர்களி லெல்லாம் மிக அழகான படைப்பாளன்!' (திருக்குர்ஆன் 23:14)

மனிதனின் கருவளர்ச்சியைப் பற்றி இந்த வசனத்தில் அலக்(அலக் என்றால் அட்டைப்பூச்சியைப் போன்றது) என்ற நிலையில் உரு வாகி படிப்படியாக வளர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் வேறு ஒரு படைப்பாகச் செய்தோம் என்கிறது திருக்குர்ஆன். இதில் தான் மிகப் பெரிய அறிவியல் தத்துவம் இன்று கண்டறியப் பட்டுள்ளது.




ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் ஆகிய அனைத்தின் கரு வளர்ச்சியும் ஆரம்ப கட்டங்களில் ஒன்று போலவே நடைபெற்று ஒரே மாதிரியான தோற்றத்திலேயே உருவாகி அவற்றுக்கிடையில் பிரித்தறிந்து கொள்ள முடியாத வகையில் கரு வளர்ந்து வரும். இறுதிக் கட்டத்தில் அவை ஊர்வன வாகவோ, பறவையாகவோ அல்லது மனிதனா கவோ தத்தமது உருவ அமைப்பைக் கொண் டதாக மாறுகின்றன. அதுவரை மீன், ஆமை, பறவை, பன்றி, மனிதன் போன்ற அனைத்து உயிர்களுடைய கருவின் உருவ அமைப்பு களும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அந்தக் கரு வளர்ச்சியை விளக்கும் படம் இன் றைய பத்தாம் வகுப்பு அறிவியல் பாடப் புத்த கத்தில் இடம் பெற்றுள்ளதை நாம் காணலாம்.

## கருவறை

'அவன் உங்கள் அன்னையரின் வயிற் றில், மூன்று இருட்திரைகளினுள் ஒன்றன் பின் ஒன்றாக உங்களுக்கு வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கின்றான்' (திருக் குர்ஆன் 39:6) என்று Microscope, Scan போன்ற அறிவியல் சாதனங்கள் எதுவும் இல் லாத காலத்திலேயே கருவறை பற்றி திருக் குர்ஆன் அழகாக வர்ணித்து உள்ளது.

## அந்த மூன்று இருள் திரைகள்:

1. குழந்தையைச் சுற்றியிருக்கும் சவ்வுப் படலம் (Amniotic membrance)
2. கருப்பையின் சுவர்(Uterine wall)
3. தாயின் அடிவயிறு (Abdominal wall)

இதன்மூலம்இன்றையநவீனகால கருவியல் கண்டுபிடிப்புகள் திருக்குர் ஆனின் கருத்துகளோடு பொருந்தி உள்ளதை அறியலாம்.

## தேனீ

உலகில் உள்ள அனைத்தும் தக்க காரணத்தோடுதான் படைக்கப்பட்டுள்ளன என்று திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. 'நாம் இந்த வானத்தையும், பூமியையும் அவற்றிற்கிடையே உள்ள இந்த உலகத்தையும் வீணாகப் படைத்திடவில்லை.' (திருக்குர்ஆன்38:27)



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது Honey bee theory என்ற நூலில் 'தேனீக்களை அழித்து விட்டால் நான்கு ஆண்டுகளில் மனித வாழ்வே சாத்தியமற்றதாகி விடும். ஏனென்றால் தாவரங்களின் மகரந்தச் சேர்க்கை 80% நடைபெற இந்த தேனீக்களே காரணமாக உள்ளன' என்கிறார்.

1973இல் நோபல் பரிசுபெற்ற Karl Von Frisch, லண்டன் EVA Carne இருவரும் சேர்ந்து 1975இல் எழுதிய Honey என்ற நூலும், 1987இல் Harvard பல்கலைக்கழகப் பேராசிரியர் Mark L.Winston எழுதிய The Biological of the Honey Bee என்ற நூலும் சொல்லும் செய்தி வேலைக்காரப் பெண் தேனீக்களே தேனை எடுத்து வருகின்றன என்பதாகும். அதையே திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

'மேலும், (பாருங்கள்!) உம் இறைவன் தேனீக்கு இவ்வாறு வஹி அறிவித்தான்: மலைகளிலும் மரங்களிலும் பந்தல்(களில் படரும் கொடி)களிலும் நீ கூடுகளைக் கட்டிக் கொள்!' (திருக்குர்ஆன் 16:68)

மேற்கண்ட (16:68,69) திருக்குர்ஆனின் அரபு வசனங்களில் 'குலி' என்ற வார்த்தையும் 'புதூனிஹா' என்ற வார்த்தையும் பெண் பாலைக் குறிக்கும் வார்த்தைகளாகும். இந்தத் தேனீக்கள் மலர்களிலிருந்து தேனை உறிஞ்சி தனது கூட்டில் சேகரித்து வைப்பதாக நாம் நம்புகிறோம். ஆனால் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

'மேலும், பலதரப்பட்ட பழங்களிலிருந்து சாற்றை உறிஞ்சிக் கொள்! உன் இறைவன் சீராக அமைத்துத் தந்த வழியில் சென்று கொண்டிரு! அந்தத் தேனீக்களின் உள்ளே இருந்து பலவிதமான நிறமுடைய ஒரு பானம் வெளிப்படுகின்றது. அதில் மக்களுக்கு நிவாரணம் இருக்கிறது. திண்ணமாக, சிந்திக்கக்கூடிய மக்களுக்கு இதில் ஒரு சான்று இருக்கிறது'(திருக்குர்ஆன் 16:69)

தேனீக்கள் மலர்களில் உள்ள குளுக்கோஸைத்தான் உணவாக உட்கொள்கின்றன. இந்த குளுக்கோஸ் அவற்றின் வயிற்றுக்குள் சென்று வேதியல் மாற்றம் அடைந்து அதன் நீர்மம் குறைக்கப்பட்டு அதன் வயிற்றிலிருந்து தேனாக வெளிப்பட்டு கூடுகளில் சேகரிக்கப்படுகின்றது. இதையே மேற்கண்ட திருக்குர்ஆன் வசனம் தெளிவாக வயிற்றிலிருந்து தேன் உருவாகின்றது என்று அறிவிக்கிறது. ஆனால் நாம் தேனீக்கள் மலர்களிலிருந்து தேனை உறிஞ்சி வந்து சேமிப்பதாக நம்பி வருகிறோம்.

## அழிவு

'திண்ணமாக, நாம் இந்த பூமியில் வந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், அதன் சுற்றளவை நாற்புறங்களிலிருந்தும் குறைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் இவர்கள் கவனிக்கவில்லையா?' (திருக்குர்ஆன் 13:41) என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களைச் சிந்திக்கச் சொல்கிறது குர்ஆன்.

இதுபோன்ற இன்னும் பல எண்ணற்ற அறிவியல் கருத்துகளை உள்ளடக்கிய திருக்குர்ஆன் அறிவைத் தேடுபவர்களுக்குப் பல அரிய உண்மைகளைத் தர அனைத்து மொழிகளிலும் திறந்தே உள்ளது.

'திண்ணமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவுபகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன'. (திருக்குர்ஆன் 3:190)

விருப்பு வெறுப்பற்று ஆய்வுக் கண்ணோட்டத்துடன் திருக்குர்ஆனை அணுக வேண்டும். இது முஸ்லிம்களுக்கு மட்டும் வழிகாட்ட வந்த வேதம் அல்ல. அனைவருக்கும் வழிகாட்ட வந்த வேதம். சிந்திப்போம். செயல்படுவோம்.

# தொழுகைக்கு மட்டும்தான் பள்ளிவாசலா?

**- A.H. யாசிர் அரபாத் ஹசனி**

உலகில் இஸ்லாம் பரந்து விரிந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ள பள்ளி வாசல்கள் முக்கியப் பங்கு வகித்தது என்பதே வரலாறு. நாட்டின் கல்விச் சாலையாகவும், சட்டமன்றமாகவும், நீதிமன்றமாகவும், திகழ்ந்து உலகில் பெரும் மாற்றத்திற்கு விதையாக மாறி அதனை ஆளும் மாமன்றமாகப் பள்ளி வாசல்கள் திகழ்ந்தது என்பதே வரலாறு.

நபித்தோழர்களில் ஒரு பிரிவினர் விவசாயம், தொழில்கள் என்று தங்களது நேரங்களைச் செலவு செய்தனர். அதேபோல் எழுபது திண்ணைத் தோழர்கள் காலை முதல் மாலை வரை தங்களது நேரங்களை முழுமையாகப் பள்ளிவாசலில் கழித்தனர். அங்கு, கல்வி கற்றல், கற்பித்தல் போன்ற இஸ்லாமியச் சுவை நீரைச் சுவைத்துக் கொண்டே பயன் பெற்றனர்.

கல்வி கற்பது, கற்றுக் கொடுப்பது இரண்டும் அறப்போர் புரிந்த நன்மை களைக் கொண்டு வரும் என்ற நபிமொழி முஸ்னது அஹமதில் பதிவாகி உள்ளது.

நபி(ஸல்) அவர்களின் காலத்தில் இருபத்தி நான்கு மணிநேரமும் சமூக முனேற்றதிற்குப் பயன்பெற்ற பள்ளி வாசல்கள் தற்போது ஐவேளைத் தொழுகை, திருமணம் செய்து வைத்தல், முத்தவல்லிகளைத் தேர்வு செய்தல், இரண்டு மணி நேரம் மட்டுமே திருக் குர்ஆன் கற்றுத் தருதல் போன்ற நேரங்கள்



**ஐவேளைத் தொழுகை, திருமணம் செய்து வைத்தல், முத்தவல்லிகள் தேர்வு செய்தல், இரண்டு மணி நேரம் மட்டுமே திருக்குர்ஆன் கற்றுத் தருதல் போன்ற நேரங்கள் தவிர்த்து யாருக்கும் பயனற்று இருப்பதால் சமூக மேம்பாட்டின் நரம்புகள் பலவீனமாகக் காணப்படுகின்றன.**

தவிர்த்து யாருக்கும் பயனற்று இருப்பதால் சமூக மேம்பாட்டின் நரம்புகள் பலவீனமாகக் காணப்படுகின்றன.

கல்விக் கூடமே உலகம் முழுவதும் கிறித்தவம் வளர்ந்து மேலோங்கி நிற்க முன்னுரை எழுதுகிறது. கல்வி கற்பது கடமை. கல்வியே சமூக அடையாளம். படித்தல் என்ற வார்த்தையே திருக்குர்ஆனில் இறங்கிய 96:4,5 முதல் வசனம் என்று மார் தட்டி மேடைக்கு மேடை பெருமை பேசும் இஸ்லாமிய சமூகம் கல்வியில் பின்னோக்கிச் செல்கிறது.

கிறித்தவ ஆலயம் அருகில் கல்விக் கூடம் இருக்கும் என்பது போல் பள்ளிவாசல் அருகில் திருமண மண்டபம் இருக்கும் என்ற நிலைக்கு நம் சமூகம் தள்ளப்பட்டு விட்டது. பொருளாதார மேம்பாடுகளில் கவனம் செலுத்தும் நாம் கல்வி மேம்பாட்டில் தடம் மாறிப் போனதன் விளைவு அதிகார நாற்காலி நிறைவேறாத கனவாக மாறிப் போனது.

பள்ளிவாசல்கள் பற்றிய குறுகிய கண்ணோட்டத்தைக் கடந்து நபியவர்களின் காலத்திற்குப் பயணப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இருபத்தி நான்கு மணி நேரம் இயங்கும் விதமாகப் பள்ளி வாசல்களை மாற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. தொழுகை நேரம் போக கல்வி, அரசியல், சமூக முன்னேற்றத் திற்குப் பயன்படும் அனைத்தும் கற்பிக்க வேண்டும்.

மஹல்லாவில் ஆண்டுதோறும் மேற் படிப்பு வழிகாட்டல் நிகழ்ச்சிகள், கல்வி யாளர்கள், விளையாட்டு வீரர்களை அழைத்து கருத்துகள் பரிமாற்றம் நடத்தல் வேண்டும். கல்வியாளர்கள், விளையாட்டு வீரர்கள், தொழிலாளர்கள், விவசாயிகளின் தரவுகள் எப்போதும் முத்தவல்லி மேசை மீது இடம்பெற வேண்டும். மஹல்லா என்பது சட்டமன்றம் போன்றது. அங்கு மஹல்லா சார்ந்த அனைத்தும் பேசப்பட வேண்டும். இதுவே அடுத்தக் கட்ட நகர்வை நம் சமூகம் காணும் வாய்ப்பிற்குப் பாதை வகுக்கும்.

பள்ளிவாசல்கள் கல்விக் கூடமாக மாறும் காலமே இஸ்லாமிய சமுதாயம் உயர்ந்த இடத்தை அடையும் பாதைகளைத் திறக்கும்.


ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# அக்கரைப் பச்சை 38

**ஜரீனா ஜமால்**

ஓலமிட்டுக் கொண்டிருந்த சித்தி மாவை எப்படிச் சமாளிப்பது என்று சாலிஹா விழித்துக் கொண்டிருக்க சித்திமா சண்டைக்கு வராத குறையாகப் பேசினாள்.

'ஏம்மா! என் புள்ளைக்கு யாரப் பேசியிருக்க? இது நாயமா?'

'சாச்சி! எவ்வளவு நாள் தான் மச்சி தனிச்சி இருப்பாங்க?'

'அட! நல்லாருந்து நாள்தோறும் வாந்திருவே! நூத்துக்கு இருந்து பூத்து சொறிஞ்சிறுவே! உங்க அண்ணனுக்கு இருந்த வியாதியை ஒளிச்சு வச்சு எம் புள்ளயக் கட்டுனீங்க. இப்ப பாழும் கிணத்துல தள்ளப் பாக்குறீங்க'

சாலிஹா சாச்சியின் வாயை மூடினாள். 'சாச்சிமா பரமா பேசுங்க. பதறாதீங்க.'

'என்னத்தளா பரமா பேச? அவே(ன்) சிங்கப்பூர்ல பொண்ணு வச்சிருக்கானாம். புள்ளயிலுவும் இருக்குதாம். எட்டாந்தெரு கட்ட வூட்டுல பேசிக்கிறாங்க. உன்னக் கட்டி இங்க ஒரு பொண்ணு அங்க ஒரு பொண்ணுன்னு வாழ நெனக்கிறானுவ. நெசந்தானான்னு விசாரிச்சிட்டு நான் அரக்கப் பறக்க ஓடியாறேன். வரட்டும் உன் வீட்டுக்காரன். அவன மருமகன்னு பாக்காம உண்டு இல்லைன்னு பண்ணுறேன்.'

'சாச்சிமா அமைதியா இருங்க!' சித்தி அமர்ந்தாள்.

'தண்ணி தாளா..! என் குடலெல்லாம் துடிக்குது'

'உச்சி வெயில்ல ஏன் வந்தீங்க? மெதுவா வர வேண்டியதுதானே?'

'எம்மவளே! உனக்கு ஒண்ணுன்னா என்னால தாங்க முடியாதுளா!'

செம்பில் கொடுத்த ஜூஸை வாங்கி மடக்கு மடக்கென்று குடித்தாள்.

'சாச்சிமா ஒன்னுன்னா ஏன் பதர்றீங்க'

காதுக்கருகில் போய் மெதுவாகக் கேட்டாள். 'நான் கலியாணம் முடிக்கக் கூடாதா?'

அக்கா மகளை அதிர்ச்சியுடன் பார்த்தாள் சித்தி.

'சாலிமா! நல்ல நல்ல புள்ளைங்க எல்லாம் இருக்காங்க. என் பிஞ்சுக்கிளியே இவ(ன்) வாணாம். நல்லவன் இல்லை. குடும்பமே முழுப் பூசணிக்காய சோத்துல மறைக்காங்க'

'நான் சும்மா சொன்னேன் சாச்சி மா'

'என் தங்கமே! வா நாம மதுரைக்குப் போகலாம். உம் உம்மாட்ட போய் ஒன்ன ஒப்படைக்கணும்'

'ஒன்னும் பயப்படாதீங்க! எந்த பயமும் இல்லை'.

ஒருபாடு சாச்சியைச் சமாதானப்படுத்தி அக்கரைக்கு அனுப்பி வைக்கும் முன் போதும் போதும் என்றாகிவிட்டது. இரவு முபீனுடைய போன் வந்தது. மனம் சற்று லேசானதால் மகிழ்வாக எடுத்து பேசினாள்.

'ஆன்ட்டி நல்லா இருக்கீங்களா?'

'அல்ஹம்துலில்லாஹ். நீ எப்படி இருக்க?'

'நான் நல்லா இல்ல'

'இங்க என்னென்னவோ நடக்குது ஆன்ட்டி'

'அப்படி என்னடி அதிசயம் நடந்துச்சு'

'பரிதா ஆண்டி வீட்டில் வேலை செய்யும் சமையக்காரமாக்கு என்னைப் பிடித்து விட்டதாம். அவங்க மகனுக்காக அவங்க கிட்ட பேசுறாங்க'

'அட! நல்ல செய்தி சொன்னே. என் மனதில் மழை பெய்கிறது.'

**‘தமிழ்நாட்டுல போய் வியாபாரம் பண்ணுறீங்களா? இங்கே நான் ஏற்பாடு பண்றேன். இனி குஜராத்தை விட்டு வெளியே போனீங்க கண்ணை தோண்டிடுவேன். கை காலை வெட்டுவேன்.**

‘அப்ப குடை பிடிங்க! இல்லன்னா ரோஸ்னியிலே தோட்டம் வளர்த்த மாதிரி மனசுல விதை போடுங்க’.

‘ஏண்டி கோபப் படுற? ஒரு நாளைக்கு நீ கல்யாணம் ஆகி போக வேண்டியது தானே! அதே பரிதா ஆண்டிக்குத் தெரிஞ்சவங் கண்ணா நல்லது தானே?’

‘உங்களுக்குக் கூட கல்யாணம் பேசிக் கிட்டாங்க. அதுவும் நல்லதா?’

‘யாரடி சொன்னாங்க.?’

‘நேத்து மீட்டிங்ல எல்லாரும் பேசிக் கிட்டாங்க.’

‘அது சும்மா. அவங்க கூப்பிட்டதுக்கு நான் வரமுடியாத காரணம் சொன்னேன்’

‘ஆனா நான் உங்க மேல கோவமா இருக்கேன் ஆன்ட்டி!’

‘ஏன் என்ன விஷயம். நான் வந்த இந்த ஒரு மாதத்தில் எத்தனை போன் போட்டே? நல்லாத் தானே பேசுனே?’

‘ஆமா உங்க கிட்ட பார்ஷியாலிட்டி ஜாஸ்தி’

‘நல்லாத்தான் சைதா மேடம் மாறி இங்கிலீஷ்ல பேசுறே. பேசாம ரோஷி னில்ல டீச்சரா ஆயிரு!’

மௌனம் சாதித்தாள்.

‘என்ன கோபம் சொல்லுடி..’

‘குல்ஹப்ஸா குஜராத் போகும்போது அவளைக் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தம் கொடுத்தீங்களே? நிறைய பிள்ளை களுக்கு அப்படித்தான் கொடுத்தீங்க.’

‘ஆமா அதுக்கு என்னடி இப்போ?’

‘நான் ரயில்வே ஸ்டேஷன் வரை உங்களை சென்ட் ஆப் பண்ண வந்தேன். எனக்கு அப்படி ஒரு முத்தம் கொடுத் தீங்களா?’

‘ச்சீ... அது சின்னப் பிள்ளைங் கடி.. நீ வளர்ந்த குமரி இப்படி எல் லாம் பேசக்கூடாது’

‘ஆன்ட்டி குல்லு போன் போட்டு பேசி னாள்’

‘அங்க காந்தி நகர்ல பெரிய கெடுபிடியாம். அந்த ஏரியா தாதா வந்து எங்கடி தப் பிச்சு போயிட்டீங்களா? வந்துட்டீங்கள்ள இனி உங்களை விடமாட்டேன்னு மிரட் டிட்டுப் போனானாம். அப்படியே பயந்து போய் அழுறா. இன்னும் ரெண்டு பிள்ளைகள் வீட்டிலும் போய் கத்தி இருக் கான்’

‘ஐயோ பாவமே!’

குல்ஹப்ஸாவின் கொழு, கொழு முகம் கண் முன்னே வந்தது. பெரிய பெரிய கண்களும் கண்களின் கரிய இமை முடிகளும், ரோஜாப் பூவின் நிறமும் அவளுடைய சுறுசுறுப்பும் நெஞ்சம் பதை பதைத்தது.

‘ஆன்ட்டி என்ன சத்தத்தையே காணோம்?’

அப்புறம் அந்த தாதா சொன்னா னாம், ‘தமிழ்நாட்டுல போய் வியாபாரம் பண்ணுறீங்களா? இங்கே நான் ஏற் பாடு பண்றேன். இனி குஜராத்தை விட்டு வெளியே போனீங்க கண்ணை தோண்டிடுவேன். கை காலை வெட்டு வேன். ஒரு முஸ்லிம் பிள்ளை இருந்தது என்பதே காணாமல் ஆக்கிடுவேன்’ என்றா னாம்.

‘சரி சரி முபீன். நான் நாளை பேசு றேன். என் கை கால் எல்லாம் நடுங்குது. அல்லாஹ் தான் அந்தப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும்’ போனை கட் பண்ணினாள்.

இது ஒரு விதமான குரூர மனநிலை. இனச் சுத்திகரிப்பு. இது பூத்துக் காய்த்து, கனியாக்கப் பாடுபடும் கயவர்கள் மத்தியில் இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் வளர்ந்து ஃபாசிஸ வேர்களைக் கருகச் செய்ய வேண்டும். எல்லா இடத்திலும் எல்லோருக்கும் ஒரு தாதா இருந்து கலவரப்படுத்துகிறான்.

தன் நிலையைப் பற்றி சிந்தித்தாள். இன்னும் முழுக் கிணறு தாண்டவில்லை. நாளைக்குக் காலையில் நாத்தனார் கணவர் வந்து என்ன நடக்குமோ என்று மனம் பதை பதைத்துக் கொண்டிருந்தது.

மறுநாள் காலையில் மச்சியின் கணவர் வந்துவிட்டார். சாலிஹா ஒரு நாளும் அவர் முன் நின்று பேசவும் மாட்டாள். பர்தாவுடன்தான் இருப்பாள். மச்சிக்கும் அவர் கணவருக்கும் காரசாரமான விவாதம் நடந்தது. சாலிஹா எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

‘தயவு செய்து எதையும் விசாரிக்காமல் எந்தச் செய்தியும் சொல்லாதீங்க. நாமளும் பொம்பளப் பிள்ளைகளைப் பெத்து வச்சிருக்கோம்’

‘சரி சரி நான் பார்த்துக் கொள்கிறேன்’

சாலிஹா இருக்கும் இடத்தில் திரும்பி, ‘சாலிஹா! என்னை தவறாக நினைக்காதேமா! உன் நலனில் அக்கறையுடன் தான் இதைக் கையில் எடுத்தேன்’.

‘பரவாயில்ல அண்ணே! இந்த விஷயத்தை இத்தோடு விட்டுடுங்க. எனக்கு மறுமணத்தில் ஆர்வமோ விருப்பமோ கிடையாது. நான் என் வழியில் நல்ல வழியில் பயணப்படுகிறேன். அதற்கான ஒத்துழைப்பை மட்டும் கொடுங்க அது போதும்’ என்றாள்.

சாலிஹாவின் மனப் பாரம் குறைந்தது.

தொடரும்


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# சாத்தியமற்றவைகளின் சாத்தியம்

- டாக்டர் அம்ரின் கலீல்



பிள்ளைப் பேறற்ற கிழவி
கருத்தரிக்கும் போது

கன்னி
பிள்ளை பெற்றெடுக்கும் போது

தொட்டில்
பேச முடியும் போது

செத்தவரை
உயிர்த்தெழ வைக்கும் போது

மலை
தலைக்குமேல் மிதக்கும்படிச்
செய்ய முடியும் போது

செங்கடலைப்
பிளக்கச் செய்ய முடியும் போது

பாறையில்
நீரூற்று பிறப்பெடுக்கும் போது

குற்றம் சுமத்தப்பட்டவர்
அரசராகும் போது

சிறு பறவைகள்
பெரும் களிறுகளை
வீழ்த்தும் போது

துறட்டிக் கோல்
சர்ப்பமாகும் போது

அக்னிக் குண்டம்
குளிர் மண்டலமாகும் போது

நிலவு
பிளக்கும் போது

அல் வஹ்ஹாபும்
அல் கரீமுமான
உங்கள் இறைவனிடம்
கேட்கும் போது

உங்கள்
கனவுகளுக்கு ஏன் எல்லை ?

அவனுக்கோ
குன் ஃபயகூன்
குன் ஃபயகூன்

* அல் வஹ்ஹாப் - இணையற்ற வள்ளல்
* அல் கரீம் - மிகவும் தாராளமானவன்
* குன் ஃபயகூன் - இறைவன் ஆகுக என்றால் அது ஆகிவிடும்

# சமரசம் புதிர் போட்டி 11

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஜூன் 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மேலும் (நபியே) நாம் உங்களை மனிதகுலம் முழுவதற்கும் நற்செய்தி அறிவிப்பவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும்தான் அனுப்பி வைத்திருக்கின்றோம். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் அறிவதில்லை’ என்ற திருக் குர்ஆன் வசனம் இடம் பெற்றுள்ள அத்தியாயம்

   அ) ஸபா ஆ) முஹம்மத்

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அரஃபா நாளைக் காட்டிலும் வேறு எந்த நாளிலும் மக்கள் மிக அதிகமான அளவில் நரகத்தி லிருந்து விடுதலை பெறுவதில்லை’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) அபூஹுரைரா(ரலி) ஆ) ஜாபிர்(ரலி)

3. ‘அரஃபா’ என்ற சொல்லுக்குப் பொருள்

   அ) வெட்ட வெளி மைதானம்

   ஆ) அல்லாஹ்வை அறிந்தவர்கள் ஒன்று கூடும் இடம்

4. ‘கல்வி உன்னைப் பாதுகாக்கும். ஆனால் செல்வத்தை நீதான் பாதுகாக்க வேண்டும்’ என்ற கூற்றுக்குச் சொந்தக்காரர்

   அ) இமாம் ஷாஃபி(ரஹ்) ஆ) அலீ(ரலி)

5. கடந்த 5 ஆண்டுகளில் பாஜக ஆட்சியில் மூடப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண் ணிக்கை

   அ) 18,727 ஆ) 8475

6. சொற்களை அகராதிப் படுத்தும் துறையில் பணிபுரிபவர்

   அ) Grammarain ஆ) Lexicographer

7. ஜபல்பூர் படகு விபத்தில் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் தண்ணீருக்குள் பாய்ந்து 4 உயிர்களைக் காப்பாற்றிய ரியல் ஹீரோ

   அ) சுப்ஹான் ஆ) ரம்ஜான்

8. கரப்பான் பூச்சி ஜனதா பார்ட்டியை உருவாக்கி நாட்டையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர்

   அ) அபிஜித் தீப்கே ஆ) சூர்யகாந்த்

9. தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகர்

   அ) ஜே.சி.டி. பிரபாகர் ஆ) ரவி சங்கர்

10. தமிழ்நாட்டின் மிகப்பெரிய நூலகம்

    அ) கன்னிமாரா நூலகம்

    ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்

## புதிர் போட்டி ஒன்பதுக்கான விடைகள்

1.(அ) அல்பகறா 2.(அ) இப்னு உமர் (ரலி) 3.(ஆ) போதுமென்ற மனம் 4.(ஆ) ஸ்டிக்லிஸ் 5.(ஆ) மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 6.(அ) தந்தை பெரியார் 7.(ஆ) டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மத் 8.(ஆ) ஜிம்மி கார்ட்டர்

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. A. சைபுல்லாஹ், சென்னை 2. G. ரமேஷ், ஆக்கூர் 3. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம், 4. மஹ்மூதா பீவி, வண்டலூர் 5. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 6. முஹம்மது சுலைமான் இல்யாஸ், திருவாரூர் 7. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி

### பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

G. ரமேஷ், ஆக்கூர்

# மகிழ்வாய் வாழ்வோம்! மகிழ்வித்து வாழ்வோம்!



- கவிஞர் **கடல் நாகராஜன்**

உலையில் போடும்
அரிசிக்குத் தெரிவதில்லை
அது வெந்து உருமாறி
சோறாகுமென்று

ஊறும் அரிசிக்குத் தெரிவதில்லை
அது எந்திரத்தில் அரைபட்டு
மக்களுக்கு உணவாகுமென்று

வேகும் அரிசிக்குத் தெரிவதில்லை
பலருக்கு விருந்தாகுமென்று

தூவும் அரிசிக்குத் தெரிவதில்லை
அது மங்கலப் பொருளாகுமென்று

ரேசன் அரிசிக்குத் தெரிவதில்லை
அது ஏழையின் வீட்டில்
உணவாகுமென்று

அரிசி ஒன்றுதான்
அதன் பயன்கள்
மட்டும் வேறு வேறு ஆகின்றன

அது போலவே
நாம் வாழும் வாழ்க்கை ஒன்றுதான்

ஆனால் நாம் வாழும் விதத்தாலே
வேறுபடுகின்றன

எனவே நாம்
மகிழ்வாய் வாழ்வோம்
பிறரையும் மகிழ்வித்து வாழ்வோம்

## சித்திரம் பேசுது..!



J. உமைஸா பர்ஹீன்
மூனறாம் வகுப்பு
திருச்சி



J. பைஸியா நஸ்லி,
5ஆம் வகுப்பு, ராஜாஜி வித்யாலயா
சீனியர் செகண்டரி பள்ளி,
திருச்சி

# உதயமானது தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு(TNRW)

மழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள், பேரிடர் ஏற்படும் போது மீட்பு, நிவாரணம் வழங்கும் பணிகளை அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்(NGO) மேற்கொண்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே.



இது போன்ற மீட்புப் பணியில் ஈடுபடும் தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து அவர்கள் மீட்புப்பணியில் ஈடுபடும் போது தேவைப்படும் பயிற்சிகளை முறையான பயிற்றுநர்கள் மூலம் கல்லூரி மாணவர்கள் ஆர்வமுள்ள இளைஞர்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கி வரும் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு(Tamilnadu Relief Wing - TNRW) மே 2, 3 ஆகிய தேதிகளில் கோவையில் பயிற்சி முகாம் நடத்தியது. இதன் மூலம் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு(TNRW) தொடங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல்வேறு முகாம்கள் மூலம் தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. தீயணைப்புத்துறை, பேரிடர் மீட்புக் குழு, பல்வேறு பேரிடர் பயிற்சிக் குழுக்கள் மூலமாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.



கனத்த பளுவை நகர்த்துதல்(Weight Shifting), மெட்டல் கட்டிங் (Metal Cutting), இயற்கைச் சீற்றத்தில் பாதையில் இடையூறாக உள்ள மரத்தை வெட்டி பாதையைச் சீரமைத்தல் (Wood Cutting), மரம் ஏறுதல் (Tree Climbing), மழை, வெள்ளம் போன்ற நேரங்களில் மக்களை மீட்பது(Floating Rescue) போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

உயரமான கட்டிடத்தில் இருந்து அவசர நேரங்களில் கயிறு மூலம் மக்களை மீட்பது, தீ விபத்து ஏற்பட்டால் மாடியில் இருந்து கயிறு மூலம் மக்களை மீட்பது (Building Fire Rescue) போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு தன்னார்வலரும் தனித்தனியே திறன் சோதனை (Skill Test) நடத்தி மதிப்பிடப்பட்டார்கள்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ இயற்கைப் பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன்வந்துள்ள தன்னார்வலர்களின் சேவை எவ்வளவு அவசியமான உயரிய பங்களிப்பு என்பதை நினைவூட்டினார். மகத்தான சேவைக்காக முன்வந்துள்ள தன்னார்வலர்களை மனமுவந்து பாராட்டினார்.

பிறர் உயிர் காக்கும் பணியில் ஈடுபடும் தன்னார்வலர்கள் தங்கள் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டன. தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு (TNRW) தலைவர் அசாருதீன் நன்றியுரை வழங்கினார்.

**- முஹம்மது ஆரிப்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 June 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com



If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.